THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - DEC 1949
MADRAS

இந்த இதழில்

சாக்கு-சணல் சரக்குகள் கட்டுப்பாடு சட்டம்

பாங்கு சட்ட திருத்தம்

விவசாயிகள் கடன் நிவாரண சட்டம்

ஜாகை - வாடகை கட்டுப்பாடு

ஜவுளி-நூல் கட்டுப்பாடு உத்தரவு மாறுதல்

இதர கட்டுப்பாடு உத்தரவுகள்

பத்திரங்கள்

கேள்வியும்-பதிலும்

விபரங்கள் உள்ளே பார்க்கவும்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் மாதப் பத்திரிகை

டிசம்பர் 1949

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்

வந்து பாருங்கள்

★

ஸ்டார் ஆப் இந்தியா
பென்சில்களுக்கு
★
மெட்ராஸ்
பென்சில் பாக்டரி

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு
★
வி. பெருமாள் செட்டி
அண்டு சன்ஸ்

★

சிறந்த லித்தோ
அச்சு வேலைகளுக்கு
★
ஹோ & கோ

5, ஸ்டிரிங்கர்தெரு, :: மதராஸ் -1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - DEC 1949

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடரமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.

"வக்கீல்"
(சந்தா விபரம்)

வருட சந்தா	... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்)	...	0—4—0
முந்திய மாதப் பிரதி	...	0—6—0
வெளிநாடு வருட சந்தா	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 டிசம்பர் '49 இதழ் 9

பொருள் அடக்கம்

குறிப்புகள் 3
சாக்கு (முதலிய சணல் சாமான்கள்) கட்டுப்பாடு அவசரச் சட்டம் 5
விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் 7
பத்திரங்கள்: ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட. குத்தகை அல்லது வாடகைப் பத்திரங்கள் 11
ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டம் 16
கேள்வியும்-பதிலும் 19
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள் 23

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். முந்திய மாத இதழ்கள் தேவையானால் பிரதி 1-க்கு அணு 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும். கைவசம் இருக்கும் முந்திய மாதப் பிரதிகளை மட்டில்தான் அனுப்பக்கூடும். "வக்கீல்" பத்திரிகை 1949 ஞ ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

2. ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. சந்தாதாரர்களாகச் சேர விரும்பும் நேயர்கள் தங்கள் விலாசத்தை கொட்டை எழுத்தில் தனித்தனி எழுத்தாக எழுதும்படி கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

4. "வக்கீல்" பத்திரிகை சாதாரணமாய் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்படும். பிரதிகள் வரவில்லை என்று தெரிவிக்கும் வருட சந்தாதாரர்கள் ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதும்படிக்கும் அவர்கள் சந்தா நெம்பரைத் தெரிவிக்கும்படிக்கும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குடந்தையில்

பட்டு ஜவுளிகளுக்கு சிறந்த இடம்!

சுத்தமான கொள்ளேகால் பிளேச்சரில் தயார் செய்த பட்டு சேலை, பாவாடைகள் எங்களிடம் கிடைக்கும்.

ஸ்ரீநிவாஸா வர்த்தக நிலையம்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கடலங்குடி தெரு, :: கும்பகோணம்.

கலியாண காலத்திற்கேற்ற

பட்டுச் சேலைகள்

துண்டுப் பாவாடைகள், ரவிக்கைத் துண்டுகள், உங்களுக்குப் பிடித்த பல டிஸைன்களிலும், கலர்களிலும் ஸ்டாக் செய்துள்ளோம்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

சவுத் இந்தியன்

சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்

187692

அப்ஜா—ஆனந்தா—கதம்பா

சஞ்சிதா—நீலமுத்து

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள் யாவராலும் போற்றப்படுபவை.

மொத்த வியாபாரிகள் மட்டுமே தேவைக்கு எழுதவும்.

மதுரை ஜில்லாவிற்கு

"வக்கீல்" பத்திரிகை ஏஜண்ட்

திரு. T. R. நாகப்ப நாடார் & சன்

ஸ்ரீ வித்யா பேப்பர் மஹால்,

2/289, ராஜாஜி தெரு,

திருமங்கலம் – மதுரை.

தஞ்சை ஜில்லாவிற்கு

"வக்கீல்" பத்திரிகை ஏஜண்ட்

K. S. நாராயணசாமி & கோ.,

நியூஸ் ஏஜண்ட்,

மடத்துத்தெரு, :; கும்பகோணம்.

தென் இந்திய ரெயில்வே

டெலிவரி & புக்கிங் ஸர்வீஸ்

உங்களுக்கு ரயிலில் வரும் சாமான்களை உங்களிடத்தில் பொறுப்புடன் சேர்க்கவும், உங்கள் சாமான்களை புக்கிங் செய்து ரசிதை உங்களிடம் கொண்டு சேர்க்கவும் அடியிற்கண்ட இடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

D. SRINIVASAN,
Street Delivery Contractor,
7, Pillaiar Koil Street, KUMBAKONAM.

கும்பகோணம்

ஸ்ரீ சக்கரபாணி சுவாமி

தெற்கு வீதியிலுள்ள

கணபதி விலாஸ்

காபி ஹோட்டலில்

(போர்டிங் & லாட்ஜிங்)

ருசிகரமான சாப்பாடும் சிற்றுண்டியும் கிடைக்கும்.

Prop: G. கணேசன்

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 டிசம்பர் 1949 இதழ் 9

குறிப்புகள்

தமிழ் நாடு: இன்னும் சில தினங்களுக்குள் சென்னை மாகாணத்தின் ஒரு பெரும்பகுதி பிரிந்து ஆந்திர தேசமாகும். ஆந்திர தேசம் ஏற்பட்டவுடன் நம் நாட்டை இனி அதிகார பூர்வமாய், தமிழ் நாடு என்று அழைப்பது தான் பொருந்தும். 'சென்னை மாகாணம்' என்ற பெயர் இனி அவசியமில்லை. பொருந்தாது. இதைத் தமிழ் நாட்டின் தலைவர்கள் உரிய காலத்தில் வற்புறுத்துவார்கள் என்றே நம்புகிறோம். மேலும் தமிழ் நாட்டின் தலை நகரை, இன்றைக்கோ, நாளைக்கோ, தமிழ் நாட்டின் நடுவிடத்திலே தான் அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்குப்பல காரணங்கள் உண்டு. அவைகளைப் புள்ளி விவரங்களுடன் பின்பு விளக்குவோம்.

1950 ஜனவரி முதல்: "வக்கீல்" பத்திரிகையில் அடுத்தமாதம் முதல் சில புதிய பகுதிகளைச் சேர்க்கத் தீர்மானித்திருக்கிறோம். முக்கியமாக "வழக்கும்—தீர்ப்பும்" என்ற ஒரு பகுதி வெளிவரும். இதில் நமது சுப்ரீம் கோர்ட்டிலும், பல மாகாணங்களிலுள்ள ஹைகோர்ட்டுகளிலும் நடக்கும் வழக்குகளில் ஏற்படும் தீர்ப்புகளிலிருந்து பொது மக்களுக்குத் தெரிந்துகொள்ள வேண்டிய அம்சங்களைச் சுருக்கமாய் விளக்குவோம். தொழிற்சாலைச் சட்டம், ஷாப் சட்டம் போன்ற சட்டங்களின்படி அதிகாரமுள்ள சில உயர்தர விசேஷ கோர்ட்டுகளின் தீர்ப்புகளையும் நேயர்கள் இங்கு கவனிக்கலாம்.

பெருமைப்படுகிறோம்: முந்திய "வக்கீல்" இதழ்கள் ஒன்றில் "எங்கள் கடமை" என்ன என்றும் "வக்கீல்" பத்திரிகையின் லட்சியங்கள் என்ன என்றும் எழுதினோம். அதற்குள் "வக்கீல்" பெருமைப்படக் கூடிய ஒரு விஷயத்தைப்பற்றி நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அது யாதெனில் "வக்கீல்" முந்திய இதழ்களில் வெளியான சட்ட விஷயங்களை அப்படியே, எழுத்தெழுத்தாக, ஒரு புள்ளி கூட விடாமலும், மாற்றாமலும் வேறு பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்தால் அது நமக்கு மிகப் பெருமையை அளிக்கக் கூடிய விஷயம் தானே! ஆனால், சட்டத்தில் 'காபிரைட்' என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் பதிப்புரிமை என்பது

என்ன என்று நாம் இன்னும் நமது பத்திரிகையில் விளக்கவில்லை. அதனுல் தான் அப்படி நேர்ந்திருக்கலாமென்று நினைக்கிறோம். ஆனால் பத்திரிகை உலகில் உள்ள வழக்கத்தைத்தழுவி எந்தப் பத்திரிகையின் விஷயங்களை அப்படியே பிரசுரிக்க வேண்டுமோ அப்பத்திரிகையின் அனுமதி பெற்றும், எப்பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டதென்பதையும் பகிரங்கமாய்ப் பெயரை குறிபிட்டும் அதேவிஷயத்தை வேறு பத்திரிகையில் போடுவது தான் கௌரவம். சட்டமும் அது தான்.

விற்பனை வரி டிரிபுனல்: வருமான வரிச் சட்டத்தில் இருப்பதுபோலவே விற்பனை வரிச் சட்டத்தில் ஏற்படக்கூடிய வழக்குகளையும், சட்டப் பிரச்னைகளையும் விசாரித்து முடிவு செய்ய சாதாரண வரி அதிகாரிகளுக்கு மேல் ஒரு விசேஷ கோர்ட் (டிரிபுனல்) ஏற்படுத்தப்போவதாக சென்னை சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கின்றனர். இது விரும்பத்தக்கதே.

கோர்ட்டுகளின் அதிகார விஸ்தரிப்பு: டிஸ்டிரிக்ட் முன்சீப்புகள் ரூ. 5000 வரை உள்ள அசல் வியாஜ்யங்களையும் ரூ. 500 வரை உள்ள ஸ்மால்காஸ் வியாஜ்யங்களையும், சப்ஜட்ஜுகள் ரூ. 2000 வரை உள்ள ஸ்மால்காஸ் வியாஜ்யங்களையும் விசாரிக்க அதிகாரம் கொடுப்பதற்காக இப்பொழுதுள்ள சிவில் கோர்ட் சட்டத்தைத்திருத்தவும்; கிராம கோர்ட்டுகள் ரூ. 100 வரை உள்ள வியாஜ்யங்களை விசாரிக்கும்படி கிராம கோர்ட் சட்டத்தைத் திருத்தவும் சென்னை சர்க்கார் 22—11—1949 தேதி கெஜட்டில் ஒரு மசோதா பிரசுரம் செய்திருக்கின்றனர்.

ஸ்டர்லிங் ஜெனரல் இன்ஷியூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: நியூ டெல்ஹி)

கண்ட்ரோலிங் ஆபீஸ்: 10, லிங்க செட்டி தெரு, ஜி. டி. மதராஸ்.

செலுத்தப்பட்ட மூலதனம்: ரூ. 12,50,000
மோத்த ஆஸ்திகள்: ரூ. 44,00,000-க்கு மேல்

இந்திய ஆயுள் நிதி கம்பெனிகளுள் ஒரு பெரிய மூலதனமுள்ள முன்னேற்றக் கம்பெனி.

ஆயுள், மோட்டார், மற்ற எல்லாவிதமான இன்ஷியூரன்ஸ் அலுவல்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேவை:

கவர்ச்சிகரமான சம்பளத்திலோ அல்லது கமிஷன்களிலோ திருச்சி, தஞ்சாவூர், தென்னுற்காடு ஜில்லாக்களில் வேலை செய்ய ஸ்பெஷல் ஏஜண்டுகள், இன்ஸ்பெக்டர்கள், ஆர்கனைஸிங் செக்ரட்டரிகள் தேவை. அனுபவம் நிறைந்த பிஸினஸ் காரண்டி கொடுக்கக்கூடியவர்களின் மனுக்கள் உடனே கவனிக்கப்படும்.

P. S. வெங்கட்ராமன், B. A.
பிராஞ்சு செக்ரட்டரி,
யூனியன் பாங்க் பில்டிங்,
பெரிய தெரு, கும்பகோணம்.

புதிய சட்டங்கள்

சாக்கு (முதலிய சணல் சாமான்கள்) கட்டுப்பாடு அவசரச் சட்டம்

சென்னை சட்டசபை கூடாமலிருக்கும் போது மே. த. சென்னை கவர்னர் அவர்களால் இந்த 1949-ஆம் வருடத்திய 10-ஆவது அவசரச்சட்டம் (ஆர்டினன்ஸ்) 5—11—1949-ல் பிரகடனம் செய்யப்பட்டது. 5—11—49 முதல் அமுலுக்கு வந்துவிட்டது. சணலால் செய்யப்படும் சாக்கு முதலிய எல்லா சாமான்களுக்கும் இச்சட்டம் உண்டு. 'ஜூட் (சணல்) கண்ட்ரோலர்' என்ற ஒரு அதிகாரி நியமிக்கப் படுவார். (கல்கத்தாவிலிருக்கும் இந்திய ஜூட் மில்ஸ் அஸோஸியேஷன் தலைவர் ஸ்ரீ ஜான் ரோஸ் வாக்கர் என்பவர் ஜூட் கண்ட்ரோலராக 5—11—49-லேயே நியமிக்கப்பட்டுள்ளார்.)

ஜூட் கண்ட்ரோலருடைய அதிகாரங்கள் : சாக்கு முதலிய சணல் சரக்குகள் யாரிடமிருந்தாலும் அதில் தேவையானவற்றை வேறு ஒருவருக்கோ அல்லது சர்க்காருக்கோ விற்பனை செய்யும்படி உத்திரவிடலாம். அதன் விலையையும் அவரே தீர்மானிக்கலாம். சணல் சரக்குகள் தயார் செய்பவர்களை எவ்வகையான சாமான்கள்தான் தயார் செய்யலாமென்றும் உத்திரவிடலாம். எந்த எந்த காலத்திற்குள் எவ்வளவு சரக்குகள் தயார் செய்து கொடுக்கவேண்டுமென்று உத்திரவிடலாம். இவ்விதம் ஜூட் கண்ட்ரோலர் ஒருவருக்கு உத்திரவிட்டிருந்தால் அவர் வேறு ஒருவருடன் எவ்வித ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருந்த போதிலும், ஜூட் கண்ட்ரோலருடைய உத்திரவுப்படி நடக்க வேண்டிய கடமை உண்டு. ஜூட் கண்ட்ரோலருடைய உத்தரவை மீறுவது குற்றம். அக்குற்றத்திற்கு மூன்று வருடம் வரை சிறை தண்டனையும் அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

(5-11-1949 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் IV B-பக்கம் 215)

பாங்குச் சட்டத் திருத்தம்

1949-ஆம் வருடத்திய 10-வது மத்திய சட்டத்தில் (பாங்குச் சட்டத்தில்) சில விஷயங்கள் புதிதாக சேர்ப்பதற்காக மே. த. கவர்னர் ஜெனரல் அவர்களால் ஒரு ஆர்டினன்ஸ் என்ற அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. (1949-ஆம் வருடத்திய 23-வது மத்திய ஆர்டினன்ஸ்). இத்திருத்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

ஒரு பாங்கு மூடப்பட்டு அதன் கணக்கை நேர் செய்யும் நடவடிக்கைகள் தொடங்க (ஆங்கிலத்தில் 'வைண்டிங்அப்' என்று சொல்வது) ஹைகோர்ட்டைத் தவிர மற்ற கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கிடையாது. அந்த பாங்கின் ரிஜிஸ்டர் ஆபீஸ் எங்கே இருக்கிறதோ அந்த இடத்திற்குரிய ஹைகோர்ட்டுக்குத்தான் இந்த அதிகாரம். கிளை ஆபீசுகள் உள்பட அப்பாங்கின்பேரில்

எவர் எவ்வித பாத்தியம் கொண்டாடினு லும் அதே ஹைகோர்ட்டில்தான் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அது போலவே பாங்கின் சார்பாக மற்றவர் பேரில் தொடரப்படும் நடவடிக்கைகளும் அதே கோர்ட்டில்தான் எடுத்துக்கொள்ளப்படும். ஹைகோர்ட்டின் உத்திரவின் பேரில் ஒரு அப்பீல் உண்டு. அதில் ஏற்படும் தீர்ப்பு முடிவானது. சம்பந்தப்பட்ட எவரையும் கட்டுப்படுத்தும். ஒரு பாங்கியை ஆரம்பித்தவர்கள்மீது அல்லது அதன் டைரக்டர், மானேஜர் முதலிய எவ்வித உத்தியோகஸ்தர்மீதும் கம்பெனிச் சட்டப்படி எடுத்துக்கொள்ளக்கூடிய சில கிரிமினல் நடவடிக்கைகளும் அதே ஹைகோர்ட்டில் சுருக்கமாய் விசாரணை செய்து தண்டனை விதிக்கலாம். இரண்டு வருடத்திற்கு மேற்படாத சிறை தண்டனையும் ரூ. 1000-க்கு மேற்படாத அபராதமும் விதிக்கக்கூடிய குற்றங்களை மட்டில் மேற்கண்டபடி சுருக்கமாய் ஹைகோர்ட்டில் விசாரணை செய்யலாம். அதற்கு மேல் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களையும் அதே ஹைகோர்ட்டில் வேறு ஒரு நீதிபதி விசாரணை செய்யலாம். (அதாவது பாங்கு மூடப்படுவதற்கான நடவடிக்கைகளை விசாரிக்கும் நீதிபதியைத் தவிர வேறு ஒரு நீதிபதி.) மூடப்படும் பாங்கியைப்பற்றி ரிசர்வ் பாங்கின் அபிப்பிராயத்தை ஹைகோர்ட்டில் கேட்கலாம். கிளை ஆபீசுகள் பல இடங்களில் இருப்பதை உத்தேசித்து, எந்த ஆபீசிலுள்ள கணக்குகளையும் சொத்து முதலியவைகளையும் கைப்பற்றிக் கொடுக்கும்படி அபிஷியல் லிக்விடேடர் கேட்டுக்கொண்டால் அந்த இடத்தின் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அவைகளைக் கைப்பற்றி அவரிடம் ஒப்புவிக்கலாம். மேலும், பாங்குகள் போடக்கூடிய வியாஜ்யங்களுக்கு ஒருவருடம் காலாவதி காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது (வைண்டிங் அப் ஆர்டர்) அந்த பாங்கை மூடிக் கணக்கை நேர் செய்ய வேண்டுமென்று கோர்ட்டில் உத்திரவு செய்யும் தேதிக்கு முன் உள்ள ஒரு வருட காலத்தை காலாவதிக்காக கணக்கு செய்வதில் சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை. மேற்கண்ட விதி, பாங்குகள் மற்றவர் பேரில் தொடரக்கூடிய நடவடிக்கைகளுக்கு மட்டில். இந்த அவசரத் திருத்தச் சட்டம் அமுல் வரும்போது ஒரு பாங்கு சம்பந்தமாய் பல இடங்களில் சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கைகள் நடந்துகொண்டிருந்தாலும் அவை எல்லாம் இச்சட்டப்படி அதிகாரமுள்ள ஹைக்கோர்ட்டுக்கு மாற்றப்படும்.

(**11-10-1949** - சென்னை சர்க்கார் கெஜட், பாகம் III-B, பக்கம் **341**.)

வக்கீல்: இன்னும் இரண்டு நாளைக்குள் படி கட்டியாக வேண்டும். தெரியுமா? என்ன?

கக்ஷிக்காரர்: (கொத்தனர்) சிமண்டு, கல்லு ரெடியா இருந்தா ஒரே நாளிலே கட்டிப்பிடரேனுங்க.

மாஜிஸ்டிரேட்: (கைதியைப் பார்த்து) நீ, ஆயிரம் ராமாயணத்தை வைத்து சத்தியம் செய்தாலும், நான் நம்பப்போவதில்லை. நீ சொல்வதற்கு நேர் விரோதமான அபிப்பிராயமே கொள்வேன்.

கைதி: எசமான்! நான் குற்றவாளிதானுங்க.

நீதிபதி: குற்றவாளியே! நீ ஏன் ஒரு வக்கிலை வைத்து வழக்கு நடத்தக்கூடாது?

குற்றவாளி: எசமான்! நான் விஷயங்களை உள்ளது உள்ளபடி சொல்வதென்று தீர்மானித்துவிட்டேனுங்க.

வக்கீல்: (கக்ஷிக்காரரைப் பார்த்து) ஓய்! நஷ்டஈடு உமக்கு தீர்ப்பாகிவிட்டது. ரூபாய் நூறு கிடைக்கும்.

கக்ஷிக்காரன்: சரி பணத்தை வாங்கி எனக்கு அனுப்பிவிடுங்க

வக்கீல்: என்ன பீஸ்?

கக்ஷிக்காரன்: எவ்வளவுங்க?

வக்கீல்: நூறு ரூபாய்

கக்ஷிக்காரன்: நஷ்டஈடு கொடுக்கப்பட்டது எனக்கா, உங்களுக்கா?

கடனும் - வட்டியும்

(V. S. விஜயராகவாச்சாரி B. A., B. L.)

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்

22—3—1938-க்குப் பின் ஏற்பட்ட கடன்கள் : இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 22—3—1938-க்குப் பின் ஒரு விவசாயி கடன் வாங்கினுல் அதற்கு வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 6—4—0 வீதம் ($6\frac{1}{4}\%$) தான் வட்டி கொடுக்க வேண்டும். ஆனுல் இந்த வட்டி விகிதத்தை மாற்ற மாகாண சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அனுசரித்து சென்னை சர்க்கார் வட்டி விகிதத்தை $5\frac{1}{2}\%$ அதாவது வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 5—8—0 வீதம் வட்டி விகிதத்தைக் குறைத்து, 7—7—47-ல் உத்தரவு பிறப்பித்தனர். அந்த உத்தரவு 29—7—1947 தேதியுள்ள சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. இவ்விதம் $5\frac{1}{2}\%$ என்று வட்டி குறைக்கப்பட்டது, 29—7—1947 முதல்தான் அமுலுக்கு வருமென்றும் அதற்கு முன் உள்ள காலத்திற்கு $6\frac{1}{4}\%$ வட்டி செல்லுமென்றும் சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் அளித்த தீர்ப்பில் அபிப்பிராயம் கூறி இருக்கின்றனர். (1948—2-மதராஸ் லாஜர்னல் பக்கம் 500) 22—3—1938-க்குப் பின் கடன் வாங்கியவர் விவசாயியா அல்லவா என்று தீர்மானிப்பதெப்படி என்று ஏற்கனவே விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "வக்கீல்" 1949 அக்டோபர் இதழ் பக்கம் 9 பார்க்கவும்)

விவசாயிகள் அல்லாதவருக்கும் வட்டிக் குறைவு - சட்டத்தில் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது : இச்சட்டத்தில் புதிதாய், செக்ஷன் 13 A என்று 1948-ல் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதன் பிரகாரம் ஒருவருக்கு நிலம் அல்லது குத்தகை முதலியவைகள் இருந்தும் முன் சொன்னபடி தொழில் வரி அல்லது வீட்டுவரி கொடுக்கும் காரணத்தால் மட்டில் இச்சட்டப்படி "விவசாயி" அல்ல என்று ஏற்பட்டாலும் அவர்கள் 22—3—38-க்குப் பின் வாங்கும் கடன்களுக்கும் மேலே சொன்னபடி வட்டி கொடுத்தால் போதும். அதாவது 29—7—1947 வரையில் வருடம் 1-க்கு ரூ. 100-க்கு 6—4—0 வீதமும் அதற்குப் பிறகு ரூ. 5—8—0 வீதமும் வட்டி கொடுத்தால் போதும். முன் இருந்த சட்டப்படி இவர்கள் "விவசாயி" அல்ல என்ற காரணத்தினுல் இவர்களுக்குப் பரிகாரம் கிடைக்காமலிருந்தது. இத்திருத்தச் சட்டப்படிக்கும் இவர்கள் "விவசாயி"கள் அல்ல. இருந்தாலும் அவர்களுக்குப் பரிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

ஒத்தி அல்லது போக்கியங்கள் : ஏற்கனவே உள்ள சட்டத்தில் ஒத்தி அல்லது போக்கியங்களை இச்சட்டம் பாதிக்கமாட்டாதென்று கண்டிருந்தது. ஆனுல் 1948-ஆம் வருடத்திய 24-ஆவது ஆக்ட்டில் ஒத்தி அல்லது போக்கியங்கள் சம்பந்தமாய் ஒரு புரட்சிகரமான திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் புதிதாய் செக்ஷன் 9 A என்ற ஒரு பகுதி சேர்க்கப் பட்டிருக்கிறது. அதன்படி :—

(1) கெடுவுக்கு முன்பே சொத்தை மீட்கலாம்: 30—9—1947-க்கு முன் ஒரு ஒத்திப்பத்திரம் (போக்கியப் பத்திரம்) எழுதிக்கொடுக்கப்பட்டு, ஒத்திபெற்றவர் (நேரிலோ, குத்தகைக்கு விட்டோ) ஒத்திச் சொத்தை அனுபவித்துக்கொண்டிருந்தால், அவருடைய ஒத்தி தஸ்தவேஜூப்

படி சொத்தை மீட்டுக்கொள்ள இன்னும் எவ்வளவு கெடு இருந்தபோதிலும், அக் கெடு நிபந்தனை இல்லாமல் கடனாளி சொத்தை மீட்கலாம். அப்படி மீட்க என்ன தொகை கொடுக்கவேண்டுமென்றும், தொகை கொடுக்காமலே மீட்கலாமா என்றும் பின் வரும் விதிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

உதாரணம்: 1—9—1945-ல் ஏற்பட்ட ஒத்தி தஸ்தாவேஜியில் 10 வருஷம் கெடு போடப்பட்டிருக்கிறது. இச்சட்டத்திற்கு முன் 1—9—1955-க்குள் இந்த போக்கியத்தை விவசாயி கடனாளி மீட்க முடியாது. இத்திருத்தச் சட்டப்படி அதற்கு முன்னும் மீட்கலாம்.

(2) ஒத்திச் சொத்தை மீட்க எவ்வளவு தொகை கட்டவேண்டும். 30 வருஷமாகிவிட்டால் ஜாடா கடனும் ரத்து. இருந்தாலும் சில நிபந்தனைகள் உண்டு: ஒத்தி பெற்றவர் ஒத்தி சொத்தை நேரிலோ, கடனாளிக்கோ, வேறு ஒருவருக்கோ குத்தகைக்கு விட்டு 30 வருஷம் அல்லது அதற்கு மேலோ அனுபவித்துவிட்டால் அவருக்குச் சேர வேண்டிய ஜாடா அசல் தொகையும் ரத்தாகிவிடுகிறது. யாதொரு தொகையும் கொடுக்காமலே கடனாளி சொத்தை மீட்டுக் கொள்ளலாம். திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதி (25—1—49) க்கு முன்பே இந்த 30 வருஷம் கடந்துவிட்டால் இச்சட்டத் தேதியில் கடன் ரத்தானதாகக் கருதப்படும்.

(3) 30 வருஷங்களுக்குக் குறைவானல் வீதாசாரமாய் அசல் தொகை ரத்து: அப்படி ஒத்தி ஏற்பட்டு 30 வருஷம் ஆகாவிட்டாலும், அனுபவித்த வருஷங்களுக்கு வீதாசாரப்படி அசல் தொகை ரத்தாகும். ஜாடா அசல் தொகையும் 30 வருஷத்தில் ரத்தாவதால் வருஷம் 1-க்கு அசலில் 30-ல் 1 பங்கு ரத்தாகும். ரத்தான தொகை போக பாக்கித் தொகையைக் கட்டி கடனாளி மீட்டுக்கொள்ளலாம்.

உதாரணம்: ஒரு விவசாயி 1939-ல் தன் நிலங்களைப் போக்கியம் வைத்து ரூ. 3000 கடன் வாங்கினர். கடன் கொடுத்தவர் நேரிலோ, குத்தகைக்கு விட்டோ 10 வருஷம் அனுபவித்த பிறகு 30-ல் 10 பங்கு அதாவது 3-ல் 1 பங்கு அசல் கடன் ரத்தாகிவிடுவதால் 1949-ல் கடனாளி ரூ. 2000 கட்டி, சொத்தை மீட்டுக்கொள்ளலாம்.

(4) ஆனல், அப்படித் தொகை கொடுத்தோ, கொடுக்காமலோ சொத்தை மீட்டுக்கொள்ளுமுன் ஒத்திச் சொத்துக்களுக்கு ஏதாவது சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தால் அதன் செலவையும் கடனாளி கொடுத்துவிடவேண்டும்.

(5) ஒத்திதார் சொத்தைத் திருப்பிக் கடனாளிக்கே குத்தகைக்கு விட்டிருந்த போதிலும் அல்லது வேறு யாருக்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தபோதிலும் அவரே சொத்தை அனுபவித்ததுபோல் தான் ஆகும்.

(6) கடனாளிக்கே சொத்தைக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் (30 வருஷ அனுபோகத்தால் ஜாடா கடனும் ரத்தாகாமல் இருந்தால்) கடனாளி குத்தகைக்குப் பதிலாக இச்சட்டப்படி ஒரு விவசாயி கொடுக்க வேண்டிய வட்டியை மட்டில் கொடுத்தால் போதும். கடனாளியே குத்தகைதாரராக இருந்து 30 வருஷ அனுபோகத்தால் ஒத்திக் கடன் ஜாடாவும் ரத்தாகிவிட்டால், அப்படி அசல் ரத்தாகும் தேதி வரையில் உள்ள குத்தகைத் தொகையை ஒத்திதார் வசூலிக்கப் பாத்தியமுண்டு. காலாவதியாகாமல் இருந்தால் வசூலிக்கலாம்.

(7) சில இடங்களில் போக்கிய ரத்து கிடையாது: இப்புதுச் சட்டப்படி போக்கியம் பூராவுமோ ஒரு பாகமோ ரத்தாவது தென் கன்னடம் ஜில்லா, மலையாள ஜில்லாவில் சிரக்கல், கோட்டயம், குரும்பாநாடு, வயநாடு தாலுகாவிலுள்ள சொத்துக்களுக்குக் கிடையாது.

(8) மற்ற இடங்களிலும் சிலருக்கு இச்சட்டம் லாபமில்லை: (1) 30—9—37-க்குப் பிறகு 30—1—48-க்கு முன் ஒத்திச் சொத்தின் சுவான் பாத்தியம் பூராவுமோ ஒரு

பாகமோ கடனாளியாலாவது கடனாளிமூலம் பாத்தியம் கொண்டாடுபவராலாவது பராதீனப்படுத்தப்பட்டிருந்தால் அப்படி பராதீனப்படுத்தப்பட்ட சொத்து சம்பந்தப்படுத்தப்பட்ட வரையில் ஒத்திக் கடன் அசல் ரத்தாகாது.

உதாரணம்: ஒரு கடனாளி 1920-ல் தம் சொத்துக்களை ஒத்தி வைத்து ரூ. 5000 கடன் வாங்குகிருர். அவர் 1940-ல் மேற்கண்ட ஒத்திக்குட்படுத்தி, தம் சுவான் பாத்தியத்தை வேறு ஒருவருக்குக் கிரயம் செய்கிருர். கிரயம் பெற்றவர் ஜாடா அசல் ரூ. 5000-யும் கொடுத்தால்தான் ஒத்திச் சொத்தை மீட்டுக்கொள்ளலாம். இச்சட்டம் இச்சொத்தை வாங்கியவருக்கு லாபமளிக்கவில்லை.

உதாரணம்: ஒரு கடனாளி 1920-ல் தம் சொத்துக்களை ஒத்திவைத்து ரூ. 5000 கடன் வாங்குகிருர். அவர் அச்சொத்தின் சுவான் பாத்தியத்தை ஒத்திக்குட்படுத்தி 1935-ல் வேறு ஒருவருக்குக் கிரயம் செய்கிருர். இந்தக் கிரயம் 30—9—1937-க்கு முன் ஏற்பட்டபடியால் 1950-ல் போக்கியத் தொகை ஜாடாவும் ரத்தாகிவிடும்.

உதாரணம்: 1920-ல் தம் சொத்துக்களை ஒருவர் ஒத்தி வைத்து ரூ. 5000 கடன் வாங்கினுர்; அவர் 1940-ல் இறந்து போய்விட்டார். சொத்து அவர்களுடைய வார்சுகளிடம் இருக்கிறது. 1950-ல் ஜாடா அசலும் ரத்தாகிவிடும். ஆனுல் இந்த வார்சானவர் 1945-ல் சொத்தை வேறு ஒருவருக்கு விற்றிருந்தால் வாங்கியவருக்கு லாபமில்லை. அசல் தொகை ரத்து ஆகாது.

(9) அதுபோலவே 30—9—1937-க்குப் பின் 30—1—1948-க்கு முன் சரியான பிரதிப் பிரயோஜனத்தின் பேரில் வாஸ்தவமாக ஒத்திப் பாத்தியம் பூராவுமோ, ஒரு பாகமோ வேறு ஒருவருக்கு (மேடோவர் அல்லது டிரான்ஸ்பர்) மாற்றப்பட்டிருந்தால், அப்படி மாற்றப்பெற்றவர் மாற்றப்பட்டிருக்கும் சொத்துக்கு வீதாசாரப்படிக்கும் அவர் கொடுத்த பிரதி பிரயோஜனத் தொகைக்கு மேற்படாமலும் உள்ள அசல் தொகையை அடையப் பாத்தியமுள்ளவர். ஆனுல், இவர் பூரா குத்தகைத் தொகையும் (கடனாளியிடம் குத்தகைக்கு விட்டிருந்தால்) வசூல் செய்யலாம்.

உதாரணம்: 1920-ல் ரூ. 5000-க்கு ஏற்பட்ட ஒத்தி பாத்தியத்தை ஒருவர் ரூபாய் 3500 கொடுத்து 1945-ல் டிரான்ஸ்பர் வாங்கிக்கொள்கிருர். இச்சட்டப்படி இவர் கொடுத்த ரூ. 3500-ம் இவருக்குக் கிடைக்கக்கூடியது. 30 வருஷம் ஆனுலும் இது கிடைக்கும். அசல் ஜாடாவும் ரத்தாகாது. இவர் ரூ. 5000 கொடுத்து டிரான்ஸ்பர் பெற்றிருந்தால் இவர் ஜாடா தொகையையும் அடையப் பாத்தியமுள்ளவர். அசல் கொஞ்சமும் ரத்தாகாது. இவர் டிரான்ஸ்பர் பெற்றது 1935-ல் இருந்தால் ஜாடா அசலும் 1950-ல் ரத்தாகிவிடும். 30—1—1948-க்குப் பின் டிரான்ஸ்பர் பெற்றுலும் அப்படியே.

(10) போக்கியக் கடன் கொடுத்தவர்கள் பலராக இருந்து அல்லது போக்கிய பாத்தியம் பலரிடம் வந்து அவர்களுக்குள் 30-9-1937-க்குப் பின் 30-1-1948-க்கு முன் பாகம் ஏற்பட்டிருந்தால் அவர்களை இச்சட்டம் பாதிக்காது. அசல் ரத்தாகாது.

உதாரணம்: ஒருவர் ஒரு சொத்தின் பேரில் 1920-ல் ரூ. 5000 ஒத்திக் கடன் கொடுத்து 1930 - ல் இறந்துபோகிருர். அவருக்கு இரண்டு புதல்வர்கள். தங்கள் சொத்தை 1940-ல் பாகம் செய்து கொள்கிருர்கள். இந்த ஒத்திப் பாத்தியம் யாருடைய பாகத்தில் வைக்கப்பட்டாலும் அல்லது இருவருக்குள் பிரிக்கப்பட்டிருந்தாலும் கடனாளி ஜாடா அசல் தொகையும் கொடுத்துத்தான் சொத்தை மீட்டுக் கொள்ளவேண்டும். ஆனுல், 1935-ல் அவர்கள் பாகம் செய்துகொண்டிருந்தால் 1950ல் ஜாடா போக்கிய அசலும் ரத்தாகிவிடும்.

(11) கடனாளியின் பாத்தியம் அதாவது ஒத்திச் சொத்தின் சுவான் பாத்தியம் பலருக்குச் சொந்தமாக இருந்து அதில் ஒருவர் 30—9—1937-க்குப் பின் 30—1—1948-க்கு முன் ஜாடா ஒத்தித்

தொகையையும் / கொடுத்து சொத்தை மீட்டுக்கொண்டிருந்தால் அவர் மற்றவர் களிடம் சட்டப்படி விதாசாரத் தொகை ஜாடாவையும் வசூல் செய்யும் பாத்தியம் இத்திருத்தச் சட்டத்தால் பாதிக்கப்பட மாட்டாது.

இச்சட்டத்திற்கு முன் ஏற்பட்ட சில கடன் களுக்கு விதி விலக்கு: இச்சட்டத்தேதிக்கு முன் ஸ்தாவர சொத்தை ஒருவர் கிரயம் வாங்கி கிரயத் தொகை பாக்கி கொடுக்க வேண்டியிருந்தால், அத்தொகையையும், அதன் வட்டியையும் இச்சட்டம் பாதிக் காது. பொதுக் கம்பெனிகள் அல்லது பாங்குத் தொழில் நடத்தும் கம்பெனி களுக்கு இச்சட்டத் தேதிக்கு முன் சேர வேண்டிய தொகைகள் இருந்து அதற்கு வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூபாய் 9-க்கு மேல் வட்டி காணுமல் இருந்தாலும் அத் தொகைகளை இச்சட்டம் பாதிக்காது. மேலும், கோர்ட்டில் விதிக்கும் செலவு தொகைகளையும், பெந்தகம் அல்லது அட மானம் பெற்றவர் சொத்தைக் காப்பாற்றச் சட்டப்படி செய்த செலவுகளையும் இச் சட்டம் பாதிக்காது.

நடவடிக்கைகள்: 1—10—1937-க்குப் பின் தொடரப்பட்ட பிராதுகளில், இச் சட்டப்படி கடனாளி எவ்வளவு தொகை கொடுக்கவேண்டுமென்று ஏற்படுகிறதோ அத்தொகைக்குள்ள செலவுத்தொகைதான் கொடுக்கப்படும். இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 22—3—1938 - க்கு முன் ஏற்பட்ட டிக்கிரித் தொகைகளை இச் சட்டப்படி குறைக்கவேண்டுமென்று பிரதி வாதி கோர்ட்டில் மனுக் கொடுக்கலாம். அவிபக்த ஹிந்து குடும்பத்தால் கொடுக்க வேண்டிய டிக்ரி கடனாக இருந்தால் பிரதி வாதியாக இல்லாவிட்டாலும் பாதகமில்லை, குடும்பத்தில் பங்குள்ள எவரும் மனுக் கொடுக்கலாம். இச்சட்டம் அமுலுக்கு வருமுன் வசூலான தொகைகளை முதலில் ஜாடா செலவு தொகைக்கும் உளவடைத் துக் கொள்ளலாம். இச்சட்டம் சமீபத் தில் பல வகைகளில் திருத்தப்பட்டிருப்ப தால் ஏற்கனவே உள்ள சட்டப்படி பரிகா ரம் அடையாத பலர் இத்திருத்தங்களின் படி பரிகாரம் அடைகிறார்கள். அதற்காக ஒரு புது ஷரத்தும் சேர்க்கப்பட்டிருக் கிறது. அதாவது இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு (22—3—1938-க்குப் பிறகு) ஏற்பட்ட டிக்கிரிகளைக்கூட தொகை குறைக்கவேண்டுமென்று கோர்ட்டில் மனுப் போடலாம். டிக்ரி நிறைவேற்றப்பட்டால் மேல் கண்டபடி மனுப் போடவேண்டுமென் றும், நிறைவேற்றாமல் நிறுத்திவைக்க வேண்டும் என்றும் மனுப் போடலாம். நிறைவேற்று நடவடிக்கைகள் ஸ்டே செய் யப்படும். 60 தினங்களுக்குள் மனுப் போடாவிட்டால் மறுபடியும் நிறைவேற்ற லாம். 60 நாட்களுக்குள் குறைக்க மனுப் போட்டுவிட்டால் அதன் முடிவு தெரிந்த பிறகுதான் டிக்ரியை நிறைவேற்றலாம்.

டிக்ரி ஆகாமலிருந்தாலும் தொகை குறைக்க மனு: 22—3—1938-க்கு முன் ஏற்பட்ட கடன்கள் சம்பந்தமாய் யாதொரு தாவாவும் தொடரப்படாமல் இருந்தால்கூட கடன் தொகை எவ்வளவு என்று நிர்ணயம் செய்ய மனுக் கொடுக்கலாம். கடன் கொடுத்தவரும் மனுக் கொடுக்கலாம். கடன் கொடுக்க வேண்டிய வரும் மனுக் கொடுக்கலாம். இப்படி மனுக்கொடுக்க, கடன்கொடுக்க வேண்டியவர் 1—10—1937 - லும் 22—3—1938-லும் 'விவசாயி'யாக இருக்க வேண்டும். தொகை குறைக்கப்படாமலிருந் தால் எந்தக் கோர்ட்டில் பிராது கொடுக்க வேண்டுமோ அந்தக் கோர்ட்டில்தான் மனுக் கொடுக்கலாம். ஆனால் அக்கடன் தொகை கிடைக்க ஏற்கனவேயே பிராது கொடுக்கப் பட்டிருந்தால் இம்மனு கொடுக்க முடியாது கடன் தொகை அசல் வட்டி ஜாடாவும் இச் சட்டப்படி தீர்ந்து விட்டதாகவும் மனுப் போடலாம். இவ்விதம் போடப்படும் மனு வில் ஒரு பிராது கொடுத்தால் யார் யாரை அதில் சேர்க்க வேண்டுமோ அவர்களை எல் லாம் மனுவிலும் சேர்த்துக் கொடுக்கவேண் டும். கடன் கொடுக்க வேண்டியவர் விவ சாயியாக இல்லாவிட்டால் மனு தள்ளப் படும். விவசாயியாக இருந்தால், இச் சட்டப்படி அவர் கொடுக்கவேண்டிய தொகை எவ்வளவு என்றாவது அல்லது அவர் யாதொரு தொகையும் கொடுக்க

ஆவணக் காப்பக நூலகம்
187692
சென்னை-600 008

பத்திரங்கள் - ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

[“வக்கீல்” அக்டோபர் இதழில் கிரயப் பத்திரங்களைப் பற்றியும் நவம்பர் இதழில் அடமானங்களைப் பற்றியும் அவைகளுக்குறிய ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணமும் விவரமாய் சொல்லப்பட்டன.]

குத்தகை அல்லது வாடகைப் பத்திரங்கள்

ஒரு சொத்தை அனுபவிக்கும் பாத்தியத்தை மட்டில், குறிப்பிட்ட கெடுவுக்கோ அல்லது சாசுவதமாகவோ, பிரதிப்பிரயோஜனத்தின் பேரில், மாற்றுவதுதான் குத்தகை அல்லது வாடகைக்கு விடுவது என்று பெயர். சாகுபடி நிலங்கள் அல்லது தோப்பு முதலியவைகளைப்பற்றி இருந்தால் “குத்தகை” “பகுதி” என்றும், கட்டடங்கள் வீடு முதலியவைகளைப் பற்றியதானால் “வாடகை” என்றும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்தில் பொதுவாக “லீஸ்” என்று பெயர். குத்தகை அல்லது வாடகைக்கு ஒப்புக்கொள்பவர் கொடுக்கவேண்டிய தொகைகள் ஒரே தடவையிலும் கொடுக்கப்படலாம்; அல்லது குறிப்பிட்ட கெடுக்களில் அதாவது மாதந்தோறும் அல்லது வருடத்திற்கு ஒரு முறை போன்ற கெடுக்களிலும் கொடுக்கப்படலாம். பணத்திற்குப் பதிலாகத் தானியம் அல்லது மகசூலின் ஒருபாகம் அல்லது ஏதாவது சேவை போன்ற பண மதிப்புள்ளவைகளாகவும் இருக்கலாம். இப்படி குத்தகைதாரர் அல்லது வாடகைதாரர் கொடுக்கவேண்டிய தொகை, தானியம் முதலியவற்றிற்கு, “குத்தகைத் தொகை” “குத்தகை” “பகுதி” “வாடகை” என்றும் வழங்கப்பட்டுவருகின்றன.

குத்தகைக்கு (வாடகைக்கு) விடப் பத்திரம் அவசியமா? அல்லது வாய்மொழியாக இருக்கலாமா?

(1) விவசாய உபயோகத்திற்காக ஏற்படும் குத்தகைகள், கெடு எவ்வளவாக இருந்த போதிலும், வாய்மொழியாக ஏற்

வேண்டியதில்லை என்றாவது தீர்மானிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. அவ்விதம் கோர்ட்டால் தொகை நிஷ்கர்ஷணை செய்யப்பட்ட பிறகு, கடன் கொடுத்தவர் அத்தொகைக்குள்ள கோர்ட் பீசு ஸ்டாம்பு கொடுத்து அதையே டிக்ரியாக மாற்றிக்கொண்டு நிறைவேற்றலாம். இவ்விதம் செலுத்தப்பட்ட ஸ்டாம்புத் தொகையையும் கடன் கொடுக்கவேண்டியவர் கொடுக்கவேண்டுமென்று சொல்லக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. மனுவின்பேரில் கடன் தொகை எவ்வளவு என்று தீர்மானமானவுடன் அத்தொகையைக் கடனாளி கோர்ட்டில் கட்டலாம். அப்படிச் செய்தால் அவர் பேரில் ஸ்டாம்புச் செலவு சுமக்காது. ஆனால், ஸ்டாம்பு கொடுத்து டிக்ரியாக மாற்றப்பட்டுவிட்டாலும் தொகையைக் கட்டலாம். கடன் தீர்ந்ததென்று கோர்ட்டில் ஒரு சர்டிபிகேட் கொடுக்கப்படும். கடனைக் குறைக்கவேண்டுமென்று மனுப் போட்டு நடவடிக்கைகள் நடந்துகொண்டிருந்தாலும் அல்லது அதில் ஒரு உத்திரவு ஏற்பட்டிருந்தாலும், மறுபடியும் அதே கடன் கிடைக்கவேண்டுமென்று தனிப்பிராது போடமுடியாது. இவ்விதம் பிராது போடமுடியாமல் இருக்கும் காலத்தை, காலாவதிக்காகக் கணக்குச் செய்வதில் கழித்துக்கொள்ளலாம்.

இன்ஸால்வெண்டுகள்: ஒரு விவசாயியைக் கடன் கொடுக்கச் சக்தியற்றவர் (இன்ஸால்வெண்ட்) என்று தீர்மானம் செய்யப்பட்டிருந்தாலும் அவருடைய கடன்காரர்களுக்கு யாதொரு ஈவும் பிரித்துக் கொடுபடாவிட்டால், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி அவர் கொடுக்கவேண்டிய கடன்களைக் குறைக்க மனுக் கொடுக்கலாம். கடன் கொடுத்தவர்களும், இன்ஸால்வெண்டும், ரிசீவரும் யாரும் மனுக் கொடுக்கலாம்.

படுத்திக்கொள்ளலாம். (ஆனால் குத்தகைப் பத்திரம் எழுதிக்கொண்டால் சில பத்திரங்களுக்கு ஸ்டாம்பு, ரிஜிஸ்ட்ரேஷன் இரண்டும் அவசியம்; சில பத்திரங்களுக்குத் தேவையில்லை. விபரம் கீழே 'ஸ்டாம்பு' என்ற தலைப்பிலும் 'ரிஜிஸ்டர்' என்ற தலைப்பிலும் பார்க்கவும்.)

(2) விவசாயமல்லாத மற்ற உபயோகங்களுக்கு ஏற்படும் குத்தகைகளில் (1) ஒவ்வொரு வருடமும் புதுப்பித்துக்கொள்ளக் கூடிய ஷரத்து அடங்கிய குத்தகை (வாடகை) ஏற்பாடுகளும் (2) ஒரு வருட கெடுவுக்கு மேல் கெடு இருக்கும்படி ஏற்படும் குத்தகை (வாடகை) ஏற்பாடுகளும் (3) மாதம் எவ்வளவு வாடகை, ஆறு மாதத்திற்கு எவ்வளவு வாடகை என்பதுபோல் அல்லாமல் ஒரு வருட வாடகையை மொத்தமாய் எவ்வளவென்று ஏற்படுத்திக் கொண்ட குத்தகை (வாடகை) ஏற்பாடுகளும் இவை மூன்று வகை குத்தகை ஏற்பாடுகளும் வாய் மொழியாகச் செய்து கொண்டால் செல்லாது. இவைகளுக்கு ரிஜிஸ்டர் பத்திரங்கள் இருந்தால் மட்டில் சட்டப்படி செல்லும். இல்லாவிட்டால் செல்லாது.

(3) இவை மூன்று வகைகள் தவிர மற்றக் குத்தகை (வாடகை) ஏற்பாடுகள் (விவசாய சம்பந்தமில்லாமல் இருந்தாலும்) வாய் மொழியாகவே இருக்கலாம். பத்திரங்கள் தேவையில்லை. ஆனால் குத்தகைதாரரிடம் (வாடகைக்கு ஒப்புக்கொள்பவரிடம்) உடனேயே சொத்தைச் சுவாதீனம் கொடுக்க வேண்டும். மேலும் இவ்வித குத்தகை (வாடகை) ஏற்பாடுகளையும் இஷ்டப்பட்டால் ரிஜிஸ்டர் பத்திரங்கள் மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணங்கள்

(1) 50 ஏகர் நஞ்சை நிலங்களை விவசாயத்திற்காக 10 வருட கெடுவுக்கு வாய் மொழியாகக் குத்தகைக்கு விடலாம். பத்திரம் தேவையில்லை.

(2) ஒரு வீட்டின் சொந்தக்காரர் அதை ஒரு வருடத்திற்கு மாத வாடகைக்கு விடுகின்றார், வாய் மொழியாக இருக்கலாம்.

(3) ஒருவர் தம் வீட்டை 15 மாதங்களுக்கு வாடகைக்கு விடுகின்றார், ரிஜிஸ்டர் பத்திரம் வேண்டும்.

(4) ஒருவர் தம் வீட்டை ஒரு வருடத்திற்கு ரூ. 50 என்று வாடகைக்கு பேசி விடுகின்றார், ரிஜிஸ்டர் பத்திரம் வேண்டும்.

ஸ்டாம்பு: குத்தகை (வாடகை)ப் பத்திரங்களுக்கு எவ்வளவு ஸ்டாம்பு வேண்டுமென்று தெரிந்துகொள்ள: (1) வாடகை அல்லது குத்தகையைத் தவிர ஏதாவது அதிகத் தொகை (ப்ரீமியம்) வாங்கப்படுகிறதா? (2) குத்தகை (வாடகை)ப் பத்திரத்தில் கண்டிருக்கும் கெடு எவ்வளவு? (3) வருட வாடகை என்ன? இவைகளைக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு வகைப் பத்திரங்களுக்கும் உரிய ஸ்டாம்பு கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கீழே குறிக்கப்பட்டுள்ள இதற்குமட்டில் ஸ்டாம்பு இல்லை: விவசாயம் செய்வதற்காக ஒரு விவசாயியால் எழுதிக்கொடுக்கப்படும் குத்தகைப் பத்திரத்தில் (1) குத்தகைத் தொகை எவ்வளவாக இருந்தாலும் பத்திரத்தில் கண்டிருக்கும் கெடு ஒரு வருடம் அல்லது அதற்குட்பட்டிருந்தாலும் அல்லது (2) கெடு எவ்வளவாக இருந்தாலும் சராசரி குத்தகைத் தொகை வருடம் 1-க்கு ரூ. 100-க்கு மேற்படாமலிருந்தாலும், யாதொரு ஸ்டாம்பும்தேவையில்லை. ஆகாரம் அல்லது பானத்திற்காக மரங்களைக்குறித்த குத்தகைகளும் விவசாயக் குத்தகைகளே. ஆனால் குத்தகைத் தொகையைத் தவிர வேறு அதிகப்பணம் வாங்காத பத்திரங்களாக இருந்தால் தான் இவ்விதம் ஸ்டாம்பு கிடையாது.

உதாரணங்கள்: (1) ஒருவர் தமக்குச் சொந்தமான 100 ஏகர் நஞ்சை நிலங்களை நெல் சாகுபடி செய்வதற்காக ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு விடுகிறார். குத்தகை ரூ. 1000 இருந்தாலும் கெடு ஒரு வருடமாக இருப்பதாலும், விவசாயக் குத்தகையாக இருப்பதாலும் இதற்கு ஸ்டாம்பு வேண்டியதில்லை. (இதை ரிஜிஸ்டர் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை.)

கீழே ‘ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டிய பத்திரங்கள்’ என்ற தலைப்பில் பார்க்கவும்.

(2) ஒருவர் தமக்குச் சொந்தமான 10 ஏகர் நஞ்சை நிலங்களை நெல் சாகுபடி செய்வதற்காக 10 வருடங்களுக்குக் குத்தகைக்கு விடுகிறார். வருடம் ஒன்றுக்கு குத்தகை ரூ. 75 இதற்கும் ஸ்டாம்பு தேவையில்லை. விவசாயக் குத்தகையாக இருப்பதாலும், கெடு அதிகமாக இருந்தாலும் வருடக் குத்தகை ரூ. 100-க்குள் இருப்பதாலும் ஸ்டாம்பு வேண்டாம். ஆனால் பத்திரம் ரிஜிஸ்டராக வேண்டும். (கீழே ‘ரிஜிஸ்டர்’ என்ற தலைப்பைப் பார்க்கவும்.)

ஸ்டாம்பு அட்டவணை

குத்தகை (வாடகை)ப் பத்திரத்தில் கண்டிருக்கும் கெடு.	“ஸ்டாம்பு மதிப்பு” அதாவது எவ்வளவு தொகைக்குரிய ஸ்டாம்பு வேண்டும்,	ஸ்டாம்பு விகிதம். “ஸ்டாம்பு மதிப்பு”	ஸ்டாம்பு ரூ. அ. பை
1. ஒருவருடத்திற்குள் இருந்தால்	பத்திரத்தில் கண்ட ஜாடா குத்தகை (வாடகை)த்தொகை	ரூ. 10-க்கு மேற்படாமலிருந்தால்	0—6—0
2. ஒரு வருடத்திற்குக் குறையாமலும் 5 வருடங்களுக்கு மேல் இல்லாதிருந்தால்	ஒரு வருட சராசரி குத்தகை (வாடகை)த் தொகை	ரூ. 10-க்கு மேல் ரூ. 50-க்கு மேல்படாமலிருந்தால்	0—12-0
		ரூ. 50 ,, ரூ. 100 ,,	1—8—0
		ரூ. 100 ,, ரூ. 200 ,,	3—0—0
		ரூ. 200 ,, ரூ. 300 ,,	4—8—0
		ரூ. 300 ,, ரூ. 400 ,,	6—0—0
		ரூ. 400 ,, ரூ. 500 ,,	7—8—0
		ரூ. 500 ,, ரூ. 600 ,,	9—0—0
		ரூ. 600 ,, ரூ. 700 ,,	10—8—0
		ரூ. 700 ,, ரூ. 800 ,,	12—0—0
		ரூ. 800 ,, ரூ. 900 ,,	13—8—0
		ரூ. 900 ,, ரூ. 1000 ,,	15—0—0
		ரூ. 1000-க்கும் மேற்பட்ட ஒவ்வொரு ரூ. 500-க்கும் அதன் பாகத்திற்கும் அதிகப்படியாக	ரூ. 7—8—0
3. 5 வருடங்களுக்கு மேல் 10 வருடங்களுக்கு மேல் இல்லாதிருந்தால்	ஒரு வருட சராசரி குத்தகை (வாடகை)த் தொகை	ரூ. 50-க்கு மேற்படாமலிருந்தால்	1—8—0
		ரூ. 50-க்கு மேல் ரூ. 100-க்கு மேற்படாமலிருந்தால்	3—0—0
		ரூ. 100 ,, ரூ. 200 ,,	6—0—0
		ரூ. 200 ,, ரூ. 300 ,,	9—0—0
		ரூ. 300 ,, ரூ. 400 ,,	12—0—0
		ரூ. 400 ,, ரூ. 500 ,,	15—0—0
		ரூ. 500 ,, ரூ. 600 ,,	18—0—0
		ரூ. 600 ,, ரூ. 700 ,,	21—0—0
		ரூ. 700 ,, ரூ. 800 ,,	24—0—0
		ரூ. 800 ,, ரூ. 900 ,,	27—0—0
		ரூ. 900 ,, ரூ. 1000 ,,	30—0—0
		ரூ. 1000-க்கு மேற்பட்ட ஒவ்வொரு ரூ. 500-க்கும், அதன் பாகத்திற்கும் அதிகப்படியாக	ரூ. 15—0—0

4. 10 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு மேற்படமா விருந்தால்	இரண்டு வருட குத்தகை (வாடகை)த் தொகை	ஷை விகிதப்படி
5. 20 வருடங்களுக்கு மேல் 30 வருடங்களுக்கு மேற்படாம விருந்தால்	3 வருட குத்தகை (வாடகை)த் தொகை	ஷை விகிதப்படி
6. 30 வருடங்களுக்கு மேல் 100 வருடங்களுக்கு மேற்படாம விருந்தால்	4 வருட குத்தகை (வாடகை)த் தொகை	ஷை விகிதப்படி
7. 100 வருடங்களுக்கு மேற் பட்டிருந்தாலும், சாசுவதக் குத்தகையாக இருந்தாலும்.	முதல் 50 வருடங்களுக்குள்ள குத்தகை (வாடகை) த் தொகை யில் 6-ல் 1 பங்குத் தொகை	ஷை விகிதப்படி
8. யாதொரு கெடுவும் குறிப் பிடாமல் இருந்தால்	3 வருட சராசரி குத்தகை (வாடகை) த் தொகை	ஷை விகிதப்படி
9. ஜாடா குத்தகை (வாடகை)த் தொகையும் ஒரே தடவையாக ஆரம்பத்திலேயே வாங்கி விட்டால்	ஜாடாத் தொகை	ஷை விகிதப்படி
10. குத்தகை (வாடகை) த் தொகையில் ஒரு பகுதியை முன் பணமாகவும், அதைத் தவிர கெடுக்களில் குத்தகைத் தொகைகள் கொடுக்க வேண் டியதாகவும் கண்டிருந்தால்	முன் தொகைக்கும் மேலே 1 முதல் 8 வரையில் கண்டபடி கணக்குச் செய்த வாடகை மதிப் புக்கும் தனித்தனியாக கணக் குச் செய்து ஸ்டாம்பு வேண்டும்	ஷை விகிதப்படி

ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டிய குத்தகை (வாடகை)ப் பத்திரங்கள்: (1) ஒவ்வொரு வருடமும் புதுப்பித்துக்கொள்ளக் கூடிய ஷரத்து அடங்கிய குத்தகை (வாடகை)ப் பத்திரங்கள் (2) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கெடு கண்டிருக்கும் குத்தகை (வாடகை)ப் பத்திரங்கள் (3) வருட வாடகை அல்லது குத்தகை கண்டு எழுதப்பட்டிருக்கும் பத்திரங்கள் மேலே கண்ட 3 வகை குத்தகை (வாடகை)ப் பத்திரங்களும், அதற்கான உடன்படிக்கைகளும் ரிஜிஸ்டராகி இருக்கவேண்டும். இல்லாவிட்டால் செல்லமாட்டா. இவைகளைத்தவிர மற்றப் பத்திரங்கள் கட்டாயமாக ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்பதில்லை. இஷ்டப்பட்டால் ரிஜிஸ்டர் செய்துகொள்ளலாம். ஆனல், 5 வருட கெடுவுக்கு மேற்படாத கெடுவும், வருடம் 1-க்குக் குத்தகை (வாடகை) ரூ. 50-க்கு மேற்படாமலும் இருக்கும் குத்தகை (வாடகை)ப் பத்திரங்கள் ரிஜிஸ்டராக வேண்டியதில்லை என்று விதிவிலக்குச்செய்ய மாகாண சர்க்காருக்கு அதிகாரமுண்டு. சென்னை சர்க்காரும் அதை அனுசரித்து மேற்கண்ட பத்திரங்களுக்கு ரிஜிஸ்டர் வேண்டியதில்லை என்று உத்தரவிட்டிருக்கின்றனர். ஆனல், அது விவசாயக் குத்தகைகளுக்கு மட்டில்தான் செல்லும். அதாவது, விவசாயக் குத்தகையாக இருந்து கெடு 5 வருடங்களுக்கு மேற்படாமலும், வருடக் குத்தகை ரூ. 50-க்கு மேற்படாமலும் இருந்தால் அக்குத்தகைப் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டியதில்லை.

ரிஜிஸ்டர் கட்டண விகிதம்

ஒரு வருடம் அல்லது அதற்குட்பட்ட கெடு கண்ட பத்திரங்களுக்கு ஜாடா குத்தகை (வாடகை) த் தொகையின்பேரிலும் ஒரு வருடத்திற்கு மேல் கெடு போட்டு எழுதி இருக்கும் பத்திரங்களுக்கு ஒரு வருடத்திற்குள்ள சாராசரி குத்தகை (வாடகை) த் தொகையின்பேரிலும் ரிஜிஸ்டர் கட்டணம் கணக்குச் செய்யவேண்டும். சாசுவதப் பகுதிப் பத்திரங்களுக்கு முதல் 50 வருடங்களுக்குக் கொடுக்கக்கூடிய குத்தகை (வாடகை) த் தொகையில் 5 ல் 1 பங்குள்ள தொகைக்கு ரிஜிஸ்டர் கட்டணம். தானியம் அல்லது சாமானுகக் கொடுக்கவேண்டியவைகளின் மதிப்பையும் குத்தகை (வாடகை) த் தொகையுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்விதம் கணக்குச் செய்யப்பட்ட தொகைக்கு அடியில்கண்ட விகிதப்படி ரிஜிஸ்டர் கட்டணம்.

தொகை.					ரிஜிஸ்டர் கட்டணம் ரூ. அ. பை
ரூ.	1 முதல்	ரூ.	10	உள்பட	0—6—0
ரூ.	10 க்கு மேல்	ரூ.	25	,,	0—9—0
ரூ.	25 ,,	ரூ.	50	,,	0-12—0
ரூ.	50 ,,	ரூ.	75	,,	1—2—0
ரூ.	75 ,,	ரூ.	100	,,	1—8—0
ரூ.	100 ,,	ரூ.	200	,,	2—4—0
ரூ.	200 ,,	ரூ.	300	,,	3—0—0
ரூ.	300 ,,	ரூ.	400	,,	3-12—0
ரூ.	400 ,,	ரூ.	500	,,	4—8—0
ரூ.	500 ,,	ரூ.	600	,,	5—4—0
ரூ.	600 ,,	ரூ.	750	,,	6—0—0
ரூ.	750 ,,	ரூ.	1000	,,	7—8—0
ரூ.	1000 ,,	ரூ.	1500	,,	9—0—0
ரூ.	1500 ,,	ரூ.	2000	,,	10—8—0
ரூ.	2000 ,,	ரூ.	2500	,,	12—0—0
ரூ.	2500 ,,	ரூ.	3000	,,	14—0—0
ரூ.	3000 ,,	ரூ.	3500	,,	16—0—0
ரூ.	3500 ,,	ரூ.	4000	,,	18—0—0
ரூ.	4000 ,,	ரூ.	5000	,,	20—0—0

ரூ. 5000 - க்கு மேல் இருந்தால் ரூ. 5000-க்குள்ள ரூ. 20—0—0-ம், மேற்கொண்டிருக்கும் ஒவ்வொரு ரூ. 1000-க்கும் ரூ. 4—0—0 வீதமும் ரிஜிஸ்டர் கட்டணம் கட்டவேண்டும்.

இதைத் தவிர ரிஜிஸ்டர் செய்யவேண்டிய எவ்விதப் பத்திரமும் 800 வார்த்தைகளுக்கு மேல் அடங்கியதாக இருந்தால், முதல் 800 வார்த்தைகளுக்கு யாதொரு எழுத்துக் கட்டணமும் இல்லை. அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 175 வார்த்தைகளுக்கும் அணு 4 வீதம் எழுத்துக் கட்டணம் கொடுக்க வேண்டும். மொத்த எழுத்துக்கள் எவ்வளவு என்று ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் செய்யும் மதிப்புப் போதுமானது.

பிழைத்திருத்தம்: "வக்கீல்" பத்திரிகை *1949* நவம்பர் இதழ் பக்கம் *18-ல்* "மற்ற அடமானப் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு விபரம்" என்ற தலைப்பில் கடைசியில் "ரூ. *1000-க்கு* மேற்பட்ட ஒவ்வொரு ரூ. *500-க்கும்* அதன் பாகத்திற்கும் அதிகப்படியாக ரூ. *7—8—0*" என்று திருத்திக் கொள்ளவும்.

ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

(T. சம்பத் B. A., B. L.)

[குறிப்பு: இச்சட்டத்தைப் பற்றியும் இன்னும் சில சட்டங்களைப்பற்றியும் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு சட்ட சம்பந்தமான குழப்பத்தை நேயர்கள் கவனித்திருக்கலாம். இதைப்போலுள்ள வேறு ஒரு சட்டத்தைப்பற்றிச் சென்னை ஹைகோர்ட்டில் சமீபத்தில் அதாவது 10—10—1949-ல் ஒரு தீர்ப்பளிக்கப்பட்டது. அதில் சொல்லப்பட்டிருக்கும் காரணங்களை ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திற்கு உபயோகப்படுத்திப் பார்த்தால் இச்சட்டம் 1—10—1948 முதல் செல்லத்தக்கதல்ல என்று ஏற்பட்டது. அது எப்படி என்றால்: ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் அது தற்காலிகமான சட்டமென்றும் இரண்டு வருடங்களுக்குத்தான் (அதாவது 1—10—1948 வரை தான்.) அது அமுலில் இருக்குமென்றும் அச்சட்டத்திலேயே கண்டிருக்கின்றது. ஆனால் அச்சட்டத்தின் அமுல் காலத்தை மாகாண சர்க்கார் இன்னும் இரண்டு வருடங்களுக்கு விளம்பரத்தின் மூலம் நீடிக்கலாம் என்று சர்க்காருக்கு அதிலேயே அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அதன்படி 1-10-48-க்குப்பின் ஒவ்வொரு வருடமாக இச்சட்டத்தை நீடித்து, சென்னை சர்க்கார் விளம்பரங்கள் செய்தனர். அவை செல்ல மாட்டாவென்று மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட ஹைகோர்ட் தீர்ப்பிலிருந்து ஏற்பட்டது. சட்டம் செய்ய சட்ட சபைகளுக்கும், அவசரச்சட்டம் செய்ய சட்ட சபைகள் கூடாத காலத்தில் கவர்னருக்கும் தான் அதிகாரம். மாகாண சர்க்கார் சட்டம் செய்யமுடியாது. அதைப்போலவே ஒரு சட்டத்தை நீடிக்கவும் முடியாதென்று தெளிவுபட்டது. 1—10—1948-ல் உயிர் இழந்த இச்சட்டம் அமுலில் இருப்பது போலவே நடவடிக்கைகள் நடந்து வந்ததால் திடீரென்று ஒரு குழப்பமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு 18—10—1949-ல் பழைய ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் ஷரத்துக்கள் அப்படியே அடங்கிய சென்னை 1949-ஆம் வருடத்திய 5-ஆவது அவசரச் சட்டம் மே. த. சென்னை கவர்னர் அவர்களால் செய்யப்பட்டு இன்று இது தான் அமுலில் இருந்து வருகின்றது. ஆனால் அவசரச் சட்டங்களின் ஆயுள் ஆறு மாதம் தான். அதன் பொருட்டு இதையே சாதாரண சட்டமாக்கச் சென்னைச் சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கின்றது. சென்ற இதழில், இச்சட்டம் அமுலில் இருக்கும் இடங்கள், கட்டிடங்கள் காலியானால் தெரிவிக்க வேண்டியது, நியாய வாடகை, முதலிய விஷயங்களைப் பற்றி விவரமாய்ச் சொல்லப்பட்டது.]

குடி இருப்பவரை அகற்றுவது: குடி இருப்பவரைக் கட்டிடத்தை விட்டு அகற்ற, கட்டிடத்தின் சொந்தக்காரர் ஜாகை-வாடகைக் கண்ட்ரோலரிடத்தில் மனுக்கொடுக்க வேண்டும். குடி இருப்பவர் ஒப்புக்கொண்ட கெடு முடிந்து விட்டாலும், குடியிருப்பவர் பேரில் சிவில் கோர்ட்டில் அதற்காக டிக்ரி ஏற்பட்டிருந்தாலும், இச்சட்டப்படி சில காரணங்கள் இருந்தால் தான் அவரைக் கட்டிடத்தை விட்டு அகற்ற ஜாகை-வாடகைக் கண்ட்ரோலரிடத்தில் மனுக் கொடுக்க வேண்டும். குடியிருப்பவரை அகற்றப் போதுமான காரணங்கள்:

(1) குடியிருப்பவர் எந்தத் தேதியில் வாடகை கொடுக்க வேண்டுமென்று ஏதாவது ஒப்பந்தமிருந்தால் அதன்படி வாடகை கொடுக்க வேண்டிய தேதியிலிருந்து 15 தினங்களுக்குள்ளாகவும்; அவ்விதம் யாதொரு ஒப்பந்தமுமில்லா விட்டால் ஒவ்வொரு மாத வாடகையையும் அகற்கடுத்த மாதத்தின் கடைசித் தேதிக்குள்ளும், கொடுக்காவிட்டாலும் அல்லது குடியிருப்பவர் பேரில் யாதொரு தவறுமின்றி வாடகையைக் கொடுத்து அதைச் சொந்தக்காரர் வாங்கிக் கொள்ளும்படி முயற்சி செய்யாவிட்டாலும்,

(2) 1—10—1946-க்குப்பிறகு, கட்டிடத்தின் சொந்தக்காரருடைய எழுத்து மூலமுள்ள அனுமதியில்லாமல், குடியிருப்பவர் குடியிருக்கும் பாத்தியத்தை வேறு ஒருவருக்கு மாற்றினாலும் அல்லது அவர் வாடகைக்கு வைத்துக் கொண்டிருக்கும் இடம் பூராவையுமோ, ஒரு பாகத்தையோ உள் வாடகைக்கு விட்டாலும்; அல்லது கட்டிடத்தை எந்த உபயோகத்திற்காக வாடகைக்கு ஒப்புக் கொண்டாரோ அதற்கல்லாமல் வேறு வகையாகக் குடியிருப்பவர் கட்டடத்தை உபயோகப்படுத்தினாலும்,

(3) கட்டிடத்தின் மதிப்பு அல்லது உபயோகம் குறைந்து போகும் விதம் குடியிருப்பவர் கட்டடத்தைப் பாழ் செய்தாலும்,

(4) அக்கம்பக்கத்திலிலுள்ள கட்டிடங்களிலிருப்பவர்களுக்கு உபத்திரவம் அல்லது தொந்தரவு உண்டாகும் விதம் குடியிருப்பவர் நடந்து கொண்டாலும்.

(5) குடியிருப்பவர், சேர்ந்தாற் போல் நான்கு மாதங்கள், தகுந்த காரணமின்றி வாடகைக்கு வைத்துக் கொண்டிருக்கும் கட்டடத்தை உபயோகப் படுத்தாமலே இருந்தாலும் (இது உதகமண்டலர், கொடைக்கானல் போலுள்ள மலைப்பிரதேசங்களிலுள்ள டவுன்களுக்குப் பொருந்தாது.)

குடியிருப்பவரைக் கட்டிடத்தைக் காலி செய்து சொந்தக்காரரிடம் ஒப்புவிக்கும் படி கண்ட்ரோலர் உத்தரவு செய்யலாம். மேலும், வசிப்பதற்கான கட்டிடம் அதன் சொந்தக்காரருக்கே வசிப்பதற்குத் தேவையாக இருந்து அவருக்கு அதே ஊரில் வேறு சொந்தமான வசிப்பதற்கான கட்டிடம் இல்லாவிட்டால், சொந்தக்காரர் கண்ட்ரோலரிடம் குடியிருப்பவர்மீது மனுக் கொடுத்து, கட்டடத்தை காலி செய்ய வேண்டுமென்று கேட்கலாம். அதேபோல், வசிப்பதற்கல்லாத ஒரு கட்டடம், அதன் சொந்தக்காரர் நடத்தும் ஒரு தொழில் அல்லது வியாபாரத்திற்குத் தேவையாக இருந்து, அவருக்கு அதே ஊரில் வேறு வசிப்பதற்கல்லாத கட்டடம் சொந்தமாகவோ அல்லது அவர் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ள அவருக்கு உரிமையும் இல்லாவிட்டால், அக்கட்டடத்தை வாடகைக்கு வைத்திருப்பவரைக் காலி செய்யும்படி கேட்டு, கண்ட்ரோலருக்கு மனுப் போடலாம். ஆனால், இவ்விதம் சொந்த உபயோகத்திற்காக எவ்விதக் கட்டடம் வேண்டி இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட கெடுவுக்கு அக்கட்டடம் வாடகைக்குவிடப் பட்டிருந்தால், அக்கெடுவுக்குள் அதைக் காலி செய்யும்படி சொந்தக்காரர் கேட்க முடியாது. மேலும், ஒருவருக்குப் பல கட்டடங்கள் சொந்தமாக இருந்து மேல் கண்ட விதம் மனுப்போட்டு ஒரு வசிப்பதற்கான கட்டடத்தைச் சுவாதீனம் செய்து கொண்ட பிறகு, வேறு ஒரு வசிப்பதற்கான கட்டடமும் சொந்த உபயோகத்திற்கு வேண்டி இருக்கிறதென்று கேட்க முடியாது; அதேபோல் வசிப்பதற்கல்லாத ஒரு கட்டடத்தைச் சொந்தத் தொழில் நடத்த இவ்விதம் மனுப்போட்டு, சுவாதீனம் அடைந்த பிறகு வேறு ஒரு வசிப்பதற்கல்லாத கட்டடம் சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென்று மனுப் போட முடியாது. இவ்விதம் சொந்தக்காரருக்கு அவருடைய கட்டடத்தைச் சொந்த உபயோகத்திற்காகக் கொடுக்கும்படி உத்தரவு செய்வதாக இருந்தால், குடியிருப்பவர் அக்கட்டடத்தைக் காலி செய்யப் போதுமான அவகாசம் கொடுக்கலாம்; அப்படிக் கொடுக்கப்பட்ட கெடுவுக்கு மேற்கொண்டு அவசியமானல் இன்னும் போதுமான அவகாசம் கொடுக்கலாம். (அப்படி கொடுக்கும் கெடு மொத்தம் மூன்று மாதம் வரைதான் அவகாசம் கொடுக்கக் கண்ட்ரோலருக்கு அதிகாரமுண்டு.)

இவ்விதம் மனுப்போட்டு, குடியிருப்பவரை அகற்றி ஒரு கட்டடத்தைச் சுவாதீனம் செய்துகொண்ட பிறகு, ஒரு மாதத்திற்குள் அக்கட்டடத்தில் வசிக்காமலோ, உபயோகப்படுத்தாமலோ விட்டுவிட்டால், ஏற்கனவே அகற்றப்பட்ட குடிக்கூலிக்காரர் கண்ட்ரோலருக்கு இதைத் தெரிவித்து மனுப்போட்டால் மறுபடியும் அக்கட்டடம்

இவருடைய சுவாதீனத்திலேயே விட்டு விடப்படவேண்டுமென்று கண்ட்ரோலர் உத்திரவு செய்யலாம்.

அனுவசியமான மனு: வேண்டுமென்றே குடியிருப்பவருக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் உண்மையான காரணமில்லாமல் கட்டடத்தைக் காலி செய்யவேண்டுமென்று கட்டடக்காரர் மனுப்போட்டால், அவர், குடியிருப்பவருக்கு நஷ்டஈடு கொடுக்கும்படி கண்ட்ரோலர் உத்திரவு செய்லாம். நஷ்டஈடு ரூ. 50-க்கு மேல் இருக்காது.

குடியிருப்பவருக்கு வசதிக்குறைவு ஏற்படுத்தக் கூடாது: தகுந்த காரணமில்லாமல், ஒரு கட்டிடத்தை வாடகைக்கு வைத்துக்கொண்டிருப்பவர் அனுபவித்துவரும் வசதிகளை, கட்டிடத்தின் சொந்தக்காரர், நிறுத்தவும் மறுக்கவும் கூடாது. அவ்விதம் செய்வது குற்றமாகும். மூன்று மாதம் வரை சிறைத் தண்டனையாவது, ரூ. 2000 வரை அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படலாம். (வசதி என்றால் தண்ணீர் சப்ளை, எலெக்ட்ரிக்சப்ளை போன்றவை). அவ்விதம் கட்டிடத்தின் சொந்தக்காரர் வசதிக் குறைவு செய்தால் குடியிருப்பவர் கண்ட்ரோலருக்கு இதைத் தெரிவித்து மனுப்போடலாம். கண்ட்ரோலர் விசாரணை செய்து யாதொரு காரணமுமில்லாமல் கட்டிடத்தின் சொந்தக்காரர் அவ்விதம் வசதிகளை நிறுத்திவிட்டார் என்று தீர்மானித்தால் அவ்வசதிகளைத் திருப்பிக் கொடுக்கும்படி உத்தரவு செய்யலாம்.

கண்ட்ரோலருடைய உத்தரவுகளை நிறைவேற்ற: ஒரு கட்டிடம் காலி செய்யப்பட வேண்டுமென்று கண்ட்ரோலரால் செய்யப்படும் உத்தரவையும், வசதிகளைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று செய்யும் உத்தரவுகளையும் சென்னையில் சிடி சிவில்கோர்ட்டின் பிரதம ஜட்ஜும், அக்கோர்ட்டின் விடுமுறை நாட்களில் ஸ்மால்காஸ்கோர்ட் விடுமுறை ஜட்ஜும், மற்ற இடங்களில் சப்ஜட்ஜும், பல சப்ஜட்ஜுகள் இருந்தால் அவர்களில் தலைமையானவரும், சப்ஜட்ஜ் இல்லாத இடங்களில் ஜில்லா ஜட்ஜும்தான் நிறைவேற்றலாம். மேற்படி கோர்ட்டுக்களில்தான் நிறைவேற்ற மனுக் கொடுக்க வேண்டும்.

ஒரு முறை மனு நிராகரிக்கப்பட்டால் மறுபடியும் அதே காரணம் காண்பித்து மனுப் போட முடியாது: குடியிருப்பவர் கட்டடத்தைக் காலிசெய்ய வேண்டுமென்று கண்ட்ரோலருக்கு மனுப்போட்டு அதில் ஒரு தீர்ப்பு ஏற்பட்ட பிறகு அதே காரணங்களைக் காண்பித்து மறுபடியும் அவர் மீது கண்ட்ரோலரிடம் ஒரு புது மனுப் போடமுடியாது. வசிப்பதற்கான கட்டிடத்தைக் கண்ட்ரோலர் எழுத்து மூலம் உத்திரவு பெறுமல், வசிப்பதற்கல்லாத கட்டிடமாக மாற்றிக்கொள்ளக்கூடாது.

சொந்தக்காரர் பழுது பார்க்காவிட்டால்: குடியிருக்கும் கட்டிடத்தைப் பழுது பார்க்க வேண்டுமென்று குடியிருப்பர் சொந்தக்காரருக்கு நோட்டீஸ் கொடுத்தும் நியாயமான காலத்திற்குள் யாதொரு ரிப்பேரும் செய்யப்படாவிட்டால், குடியிருப்பவர் கண்ட்ரோலருக்கு மனுச் செய்து கொள்ளலாம். அதன் பேரில் குடி இருப்பவரே பழுது பார்த்து அதற்கான செலவை வாடகைத் தொகையில் கழித்துக் கொள்ளும்படி கண்ட்ரோலர் உத்தரவு செய்யலாம்.

அப்பீல்: கண்ட்ரோலரால் செய்யப்பட்ட எந்த உத்திரவின் பேரிலும், உத்திரவு கிடைத்த 15 தினங்களுக்குள் அப்பீல் செய்யலாம். அப்பீல் யாரிடம் செய்ய வேண்டுமென்று குறிப்பிடச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அப்பீல் முடிவடையும் வரை கண்ட்ரோலருடைய உத்தரவை நிறைவேற்றக்கூடாதென்று நிறுத்திவைக்க அப்பீல் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. கண்ட்ரோலரிடமிருந்து மனு முதலிய ரிகார்டுகளைத் தருவித்தும் அவசியமானல் இன்னும் விசாரணை செய்தும், அல்லது கண்ட்ரோலரைக் கொண்டு மறுபடியும் விசாரணை செய்தும் தீர்ப்பு அளிக்கப்படும். அப்பீல் தீர்ப்புதான் முடிவான தீர்ப்பு.

கேள்வியும் - பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: (L 1984 ரேத்தினம், திருவையாறு) ஒரு விலாசதாருக்கு இரண்டு தாலூகாக்களில் வியாபாரம் இருந்தால் இரண்டு விற்றுமுதலையும் ஒன்றாய்ச் சேர்த்து விற்பனைவரி கட்டவேண்டுமா அல்லது அந்தந்தத் தாலூகாவில் உள்ள வியாபாரத்திற்குத் தனித்தனியாக வரி கட்ட வேண்டுமா?

பதில்: தலைமை ஆபீஸ் எவ்விடம் இருக்கிறதோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள டி. ஸி. டி. ஓ. (டிப்டி கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்) விடம்தான் இரண்டு தாலூகாக்களில் உள்ள வியாபாரங்களுக்கும் சேர்த்து ரிடர்ன் கொடுத்தும் வரியும் கட்டவேண்டும்.

கேள்வி: (L 1999 ராமசுப்பிரமணியம், பொள்ளாச்சி) ஒவ்வொரு கடைக்கும் (ஷாப் சட்டம்) 16 (4) நமூனாப்படி வார விடுமுறைநாள் விடவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், தனிப்பட்ட நபர் ஒருவராலேயே நடத்தப்படும் வெற்றிலைப் பாக்கு, பழம், சோடா முதலிய சில்லறைச் சாமான்கள் விற்கும் பெட்டிக்கடைக்கு மேற்படி வார விடுமுறை வேண்டுமா?

பதில்: இக்கடைக்கு வார விடுமுறை வேண்டியதில்லை. விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி: (L 2006 திம்மய்யா, கோனூர்) முதல் மனைவி இருக்கும்போது ஒருவர் இரண்டாவது விவாகம் செய்து கொண்டால், முதல் மனைவி இது விஷயமாய் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமலிருக்கும்போது அவருடைய பெற்றோர்கள், நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமா?

பதில்: முதல் மனைவி மைனராகவோ, கோஷாவாகவோ, மேதகன் அல்லது பைத்தியமாகவோ இருந்தாலும், அவள் வியாதி காரணமாகப் பிராது கொடுக்க முடியாமலிருந்தாலும் அவருக்கு பதிலாக கோர்ட் அனுமதிபெற்று, வேறு ஒருவர் பிராது கொடுக்கலாம். அப்படி இல்லாவிடில் வேறு ஒருவரும் பிராது கொடுக்க முடியாது. ("வக்கீல்" அக்டோபர் இதழ் கேள்வி-பதில் பகுதியைப் பார்க்கவும்.)

கேள்வி: (ஷி) முதல் மனைவியே சம்மதித்து, தன் புருடனுக்கு இரண்டாவது மனைவியை மணம் செய்துவைத்து, முதல் மனைவிக்கு ஒரு பெண் குழந்தையும், இரண்டாவது மனைவிக்கு ஒரு ஆண் குழந்தையும் இருந்தால் (கணவனுடைய சொத்தில்) யாருக்கு வார்சு உரிமை உண்டு?

பதில்: (இரண்டாவது கலியாணம் பலதாரத் தடைச்சட்டம் அமுலுக்கு வந்த

தேதியாகிய 29—3—1949-க்குப் பிறகு நடந்திருந்தால்) கணவனுக்குப் பிறகு அவருடைய சொத்தில் முதல் மனைவியும் அவளுக்குப் பிறகு அவளுடைய பெண்ணும் தான் வார்சுகள். இரண்டாவதாகக் கலியாணம் செய்துகொண்ட 'மனைவி' யும் அவள் மகளும் வார்சாகமாட்டார்கள். 29—3—49-க்கு முன் இரண்டாவது கலியாணம் நடந்திருந்தால் இரண்டு மனைவிகளும், இரண்டாவது மனைவியின் மகனும் சேர்ந்து வார்சாவார்கள்.

கேள்வி: (L 2007 சுப்பிரமணியன், கோபி) (பல ஊர்களில் கிளை ஆபீஸ்கள் உள்ள) ஒரு பாங்கின் ஒரு கிளை ஆபீஸ் மூடப்பட்டால் அதில் வேலை செய்யும் சிப்பந்திகளை வேலைக்கு வேண்டாமென்று நோட்டீஸ் கொடுத்து நீக்கலாமா? நீக்கினால் எவ்வளவு மாதச்சம்பளம் கிடைக்கும்?

பதில்: ஆறு மாதத்திற்குக் குறையாமல் தொடர்ந்து வேலையில் இருந்த சிப்பந்தியை நீக்க, (1) சரியான காரணம் வேண்டும். (2) அவருக்கு ஒரு மாத நோட்டீசோ அல்லது ஒரு மாதச் சம்பளமோ கொடுக்க வேண்டும்.

கேள்வி: (L 2036 சிவப்பிரகாசம் பிள்ளை, கீழக்காட்டூர்) தங்கள் "அக்டோபர்" பத்திரிகையில் 19-ஆம் பக்கத்தில் கிரயப்பத்திரத்திற்கு, சர்சார்ஜ் ரூ. 100-க்கு 4 வீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிரயத் தொகை ரூ. 100-க்கு குறைவாக இருந்தாலும் அல்லது நூறு நூறாகக்கணக்குச் செய்வதில் சொச்சமிருந்தாலும் எவ்வளவு சர் சார்ஜ் உண்டு?

பதில்: சர்சார்ஜ் என்பது வீதாசாரமாகக் கணக்குச் செய்யப்படும். உதாரணம்: ரூ. 100-க்கு சர்சார்ஜ் ரூ. 4; ரூ. 50-க்கு ரூ. 2; ரூ. 125-க்கு சர்சார்ஜ் ரூ. 5 இப்படி.

கேள்வி: (L 2037 தண்டபாணி, பல்லடம்) 1943-ல் ரூ. 1000-க்கு ஒரு சொத்து போக்கியத்தின் பேரில் கடன் கொடுக்கப்பட்டு, சொத்தும் வாய் ஒப்பந்தமாகக் கடன் வாங்கியவரே குத்தகைக்கு வைத்திருந்தால், புதுச் சட்டப்படி என்ன தொகை கிடைக்கும். குத்தகை பாக்கிக்குத் தனி தாவா செய்யலாமா?

பதில்: புதுச்சட்டப்படி இதில் அசல் தொகையில் யாதொரு கழிவும் ஏற்படாது. ஆனால் குத்தகை பாக்கிக்குப்பதிலாக விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படிக் குள்ள வட்டியை மட்டில் வசூல் செய்யலாம்.

கேள்வி: (L 2042 சிவகுருநாதபிள்ளை, கீழக்கரை) சில நிலங்களை 1916-ல் ரூ. 500-க்கு ஒத்தி வைத்தும் அதே நிலங்களை 1924-ல் ரூ. 140-க்கு மேல் ஒத்தி வைத்தும் ஒத்தி வாங்கியவருடைய அனுபவத்தில் இருந்து வந்தவைகளை 1931-ல் பூராத் தொகையான ரூ. 640-க்கு இன்னொருவர் டிரான்சுபர் பெற்று அனுபவித்து வருகிறார். விவசாயிகள் நிவாரணச் சட்டப்படி இப்போது சுவான்தாரர் எவ்வளவு தொகை கட்டினால் ஒத்தியை மீட்க முடியும்?

பதில்: சுவான்தாரர் யாதொரு தொகையும் கட்டாமலே 1916-ஆம் வருட ஒத்தியை மீட்கலாம். 1924-ஆம் வருட ஒத்தி தொகையில் 6-ல் 1 கொடுத்து 1949-ல் மீட்கலாம்.

கேள்வி: (L 2055 அப்துல் ஹமீது, ஆரூர்) விற்பனை வரிச் சட்டப்படி பணலேவாதேவி மட்டிலும் செய்கிறவர்களிடம் ரூ. 6 கட்டும்படி சொல்லலாமா? தவறிக் கட்டியதை வாபீஸ் வாங்க முடியுமா?

பதில்: பணலேவாதேவி மட்டில் செய்பவர்களுக்கு விற்பனை வரிச் சட்டம் கிடையாது. ஆனால் ஷராப் தொழில் அதாவது தங்கம் வெள்ளி அல்லது அந்த நாணயங்களை விற்பனை செய்தால் விற்பனை வரிச்சட்டம் உண்டு. அதன்படி லைசென்சு வாங்க வேண்டும். தவறிக்கட்டியதைப் பொது சட்டங்களின்படி திருப்பி வாங்கலாம்.

கேள்வி: (L 2056 ராமகிருஷ்ணன், திருவையாறு) ஒரு கடையில் பத்து வருட சர்வீஸ் உள்ள சிப்பந்தியைக் கடைச் சொந்தக்காரர் வேலையை விட்டு நீக்கி, அப்

படி நீக்கக் காரணமில்லை என்று சிப்பந்தி லேபர் கமிஷனருக்கு அப்பீல் செய்து, லேபர் கமிஷனர் ஒரு வருடம் கழித்து, தீர்ப்புச் செய்ததில் விலக்கியதற்குச் சொல்லப்படும் காரணம் சரி அல்ல என்றும் மீண்டும் அச்சிப்பந்தியை வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டுமென்றும் இருந்தால், வேலையில்லாமலிருந்த காலத்திற்குள்ள சம்பளத்தைக் கடையின் சொந்தக்காரர் சிப்பந்திக்குக் கொடுக்க கடமைப் பட்டவரா?

பதில்: வேலையில்லாத காலத்திற்குள்ள சம்பளத்தைக் கடைக்காரர் கொடுக்க வேண்டும்.

கேள்வி: (L 2060 செண்பகம் பிள்ளை, தென்காசி) மொத்தம் வருடம் 1-க்கு ரூ. 2000 (இரண்டாயிரம்) விற்பனை என்பதை ஒப்புக்கொண்டு விற்பனைவரி ஆபீசில் அந்தத் தொகைக்கு விற்பனைவரி வசூலிக்கச் சட்டப்படி உரிமை உண்டா?

பதில்: ரூ. 2000 என்பதை விற்பனை வரி ஆபீசில் 'ஒப்புக்கொண்டு' வரி போட்டிருக்கமாட்டார்கள். ரூ. 10,000 - க்கு மேல் விற்பனை நடந்திருப்பதாகத் தீர்மானித்துத்தான் வரி போட்டிருப்பார்கள்.

கேள்வி: (L 2061 போன்னய்யா, சூரக்குடி) கிராமப் பிரதேசங்களுக்கு ஷாப் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டதா? அங்கு வாரம் ஒரு முறையாவது சிப்பந்திகளுக்கு லீவு நாள் உண்டா? கிராமக் கடைகளிலுள்ள சிப்பந்திகள் தங்கள் குறைகளை எந்த அதிகாரிகளுக்கு எழுதித் தெரியப்படுத்துவது?

பதில்: இப்போது ஷாப் சட்டம் சென்னையிலும், எல்லா முனிசிபல் டவுன்களிலும், மேஜர் பஞ்சாயத்துக்களிலும் அமுலில் இருக்கிறது. மற்றக் கிராமப் பிரதேசங்களுக்கும் இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர, சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அதை அனுசரித்து தமிழ் நாட்டில் கோயமுத்தூர் ஜில்லாவில் போத்தனூர், பெரியநாயக்கன் பாளையம், வள்ளைகணர், மதுக்கரையிலும், திருச்சி ஜில்லாவில் ராம்ஜி நகர், டால்மியா நகர் இந்த ஊர்களிலும், சேலம் ஜில்லாவில் மேட்டூரிலும் 15—6—48 முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சட்டம் அமுலில் இல்லாத இடங்களுக்கு வார விடுமுறை லீவு முதலியவை கட்டாயமல்ல. குறைகளைச் சட்டப்படி கேட்க யாதொரு அதிகாரிகளும் இப்போது இல்லை.

கேள்வி: (L 2064 M. K. சாமி, திரிச்செங்கோடு) ஒருவர் நிலத்தைப் போக்கியத்திற்கு விட்டு 25 வருடங்கள் ஆகின்றன. போக்கியத்திற்கு விட்டவர் இறந்துவிட்டால் அவருடைய வார்சுகள் சொத்தை மீட்க எவ்வளவு தொகை கட்டவேண்டும்?

பதில்: வார்சுகள் 6-ல் 1 பங்கு அசல் தொகையைக் கொடுத்து மீட்கலாம்.

கேள்வி: (L 2067 ரத்தினம், திருவையாறு) ஒரு வியாபாரி தன் கடையில் வேலை செய்யும் காரியஸ்தருக்குச் சம்பளத்துக்குப் பதிலாகச் சில சாமான்களைக் கொடுக்கலாமா?

பதில்: சம்பளம் ரொக்கமாக (அதாவது நாணயமாகவாவது, கரன்சி நோட்டாகவாவது) கொடுக்கவேண்டும். வேறு வகையில் சம்பளம் கொடுப்பது ஷாப் சட்டப்படி குற்றமாகும்.

கேள்வி: (L 2067 நரசிம்மாச்சாரி, பரஞ்சி) 30—9—1947-க்குப்பின் எழுதப்படும் போக்கியப்பத்திரங்களின் கெடு போட்டு எழுதப்பட்டிருந்தால், கெடுவுக்கு முன் (புதுச்சட்டப்படி) மீட்க முடியுமா?

பதில்: முடியாது.

கேள்வி: (ஷை) 1944-ல் ஏற்பட்ட ஒரு போக்கிய விஷயமாக 25—1—1949-க்குப் பின் கடனாளி பூராத் தொகையையும் கட்டச் சம்மதித்து, அவகாசம் கோரி லெட்டர் எழுதி இருந்தால், கடன் கொடுத்தவர் பூராத் தொகையையும் அடையப் பாத்தியமுண்டா?

பதில்: பூராத் தொகையையும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டது சட்டத்திற்கு விரோதமாக இருப்பதால் செல்லாது.

கடன் தொகை பூராவையும் கொடுக்கும் படி வற்புறுத்த முடியாது.

கேள்வி: (ஷை) ரூ. 6000-க்குக்குறை வான மதிப்பு சொத்துள்ள ஒரு ஸ்திரீ போக்கியத்தின் பேரில் 1944-ல் கடன் கொடுத்திருந்தால், அவருக்கும் போக்கிய ரத்துச் சட்டம் உண்டா?

பதில்: உண்டு. 1—10—1937-க்கு பிறகு கடன் கொடுத்தவர் ஆணுக இருந் தாலும் ஸ்திரீயாக இருந்தாலும் ஒரே சட்டம்தான்.

கேள்வி: (L 2102 கோவிந்தராஜன், நாச்சிக்குறிச்சி) ஒருவர் தாம் சுயமாகச் சம்பாதித்த சொத்துக்களைக் கோவில், சத்திரம் முதலிய தர்மத்திற்காகக் கொடுத்து ஏற்படுத்திய டிரஸ்டு பத்திரத்தை ரத்து செய்யவோ, அதில் கண்ட டிரஸ்டி களை மாற்றவோ உரிமை உண்டா?

பதில்: சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட டிரஸ்டு பத்திரத்தை மாற்ற முடியாது.

கேள்வி: (ஷை) மரண வரி என்பது என்ன? அது இப்போது அமுலில் இருக் கிறதா?

பதில்: ஒருவர் சொத்துக்களை வைத்து விட்டு இறந்து போனுல் அச்சொத்துக்களை வார்சு முறையில் அடைபவர்கள் கொடுக்க வேண்டிய வரிக்கு மரண வரி (ஆங்கிலத் தில் 'டெத் ட்யூடி') என்று பெயர். இவ் வரியில் பலவகைகள் உண்டு. இந்தியாவில் இன்னும் இவ்வரி ஏற்படுத்தவில்லை. ஆனுல் இது சம்பந்தமாய் சென்ற வருடத்தில் "எஸ்டேட் ட்யூடி பில்" என்று ஒரு மசோதா பிரசுரம் செய்யப்பட்டு பொருக்கு கமிட்டியால் பரிசிலனை செய்யப்பட்டிருக் கிறது.

கேள்வி: (L 2124 சேஷன், திருச்சி) கமிஷன் ஏஜண்டு முறைமையில் ஒரு ஜில் லாவில் வெல்லம் வாங்கி வேறு ஜில்லாக் களுக்கு விற்பனைக்கு அனுப்பினுல், அதற்கு விற்பனை வரி உண்டா?

பதில்: கமிஷன் ஏஜண்டாகத் தொழில் நடத்த லைசென்சு வாங்கிக் கொண்டு, குறிப் பிட்ட வியாபாரியின் ஏஜண்டாகவும், கமி ஷன் எவ்வளவென்று ஏற்படுத்திக் கொண் டும் வெல்லத்தை வாங்கி விற்று முதல் செய்து தனிக்கணக்கும் வைத்திருந்தால், விற்பனை வரி கிடையாது. இவைகளை சரி வர விற்பனை வரி அதிகாரிகளிடம் கமிஷன் ஏஜண்டாக தொழில் நடத்துபவர் ருசுப் பிக்க வேண்டும்.

கேள்வி: (L 2128 திருநாவுக்கரசு, மதராஸ்) ஒரு ஸ்திரீ சில சொத்துக்களை வைத்து விட்டு இறந்து விட்டால், அவை களுக்கு வார்சு அவளுடைய புருஷனு அல் லது மகனு?

பதில்: (ஹிந்துக்கள் சட்டப்படி) மகன்.

கேள்வி: (L 2152 ஷேக் அப்துல் காதர், அரியலூர்) விடுமுறை நாளில் வெளியூர் வியாபாரிகள் கடைப் பாக்கிக் காகப் பணம் கொண்டுவந்தால் வாங்க லாமா?

பதில்: கடையில் வாங்கக் கூடாது.

கேள்வி: (ஷை) ரயிலிலிருந்து வரக் கூடிய சரக்குகளை விடுமுறை தினத்தில் கடையில் இறக்கலாமா?

பதில்: இறக்கலாம். இவ்விதம் செய்ய மட்டில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக் கிறது.

கேள்வி: (ஷை) வியாபார தினத் தன்று விற்றுமுதல் செய்த சரக்குகளை வண்டி கிடைக்காத காரணத்தினுல், விடு முறை தினத்தன்று வியாபாரி வந்து சரக்கை டிலிவரி கேட்டால் கொடுக்க லாமா?

பதில்: கூடாது.

கேள்வி: (ஷை) விடுமுறையன்று கடை முதலாளி, கடையின் ஒரு பலகையைமட் டில் திறந்துகொண்டு (பாக்கி பலகைகளை மூடிக்கொண்டு) இருந்து வெளியூர் வியா பாரி வந்து தன் கணக்கைப் பார்த்துக் கொள்ள அனுமதிக்கலாமா?

பதில்: கூடாது. ★

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்

ஜவுளி - நூல்

ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு திருத்தம்-மொத்த வியாபாரி-சில்லரை வியாபாரி என்ற வித்தியாசம் எடுக்கப்பட்டது.

சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவில் மொத்த வியாபாரி என்றும் சில்லரை வியாபாரி என்றும் இருந்த வித்தியாசத்தை எடுத்து விட்டு 'ஜவுளி வியாபாரி' என்று ஒரே வகையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(1) இனி லைசென்சு கட்டணம் (மொத்த வியாபாரியாக இருந்தாலும் சில்லரை வியாபாரியாக இருந்தாலும்) புதிதாய் லைசென்சு வாங்கவும், புதிப்பித்துக் கொள்ளவும் அரை வருடத்திற்கு ரூ. 12—8—0.

(2) ஏற்கனவே மொத்த வியாபாரி ரூ. 2000-ம், மொத்த வியாபாரம் சில்லரை வியாபாரம் இரண்டும் சேர்த்து செய்பவர் ரூ. 1000-ம் சில்லரை வியாபாரம் மட்டில் செய்பவர் ரூ. 200-ம் டிபாசிட் கட்டவேண்டுமென்று இருந்தது மாற்றப்பட்டிருக்கிறது. இனி ஜவுளி வியாபாரி எவ்வகையான வியாபாரம் செய்தாலும் ரூ. 200/- டிபாசிட்டும் மொத்த கன்சைனி மட்டில் ரூ. 1000 டிபாசிட்டும் கட்டினால் போதும்.

(3) லைசென்சுக்கு மனுப்போடும் போதும் அடியில் கண்ட 3 வகைகளில் எதற்கு லைசென்சு தேவை என்று எழுதினால் போதும். அதாவது (1) ஜவுளி வியாபாரியா. (2) மொத்த கன்சைனியா அல்லது (3) அந்நிய நாட்டு ஜவுளி மட்டில் வியாபாரம் செய்பவரா.

(10—11—1949 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் II பக்கம் 1)

நூல் வியாபாரிகள் கட்டுப்பாடு சட்டத் திருத்தம்: சென்னை நூல் வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவிலும் மொத்த வியாபாரி, சில்லரை வியாபாரி என்ற வித்தியாசம் எடுக்கப்பட்டுவிட்டது. இனி 'நூல் வியாபாரி' என்று பொதுவாக வழங்கப்படும்.

இனி புதிதாய் லைசென்சு வாங்கவும் புதிப்பிக்கவும் அரை வருடத்திற்கு லைசென்சு கட்டணம் ரூ. 50. அந்நிய நாட்டு நூல் மட்டில் வியாபாரம் செய்ய அரை வருட லைசென்சு கட்டணம் ரூ. 12—8—0. ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனி லைசென்சு வேண்டும். லைசென்சு பெற்றவர் டிபாசிட் கட்டவேண்டியது ரூ. 500 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

(18—10—1948 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் II ரூல் சப்ளிமெண்ட், பக்கம் 175)

மில் ஜவுளி விலை நிர்ணயம்: சென்னை டைரெக்டர் ஆப் கண்ட்ரோல்டு கமாடிடிஸ் இம்மகாணத்தில் மில் ஜவுளிகள் விற்கக் கூடிய உயர்ந்தபட்ச விலையை பின் கண்டவாறு நிர்ணயித்திருக்கிறார்.

முத்திரை தேதி.	பம்பாய் மில் துணி விலையிலிருந்து வைக்கக்கூடிய லாப அளவு.	தெ. இ. மில் துணி விலையிலிருந்து வைக்கக்கூடிய லாப அளவு.
31-10-49 வரை மில்லில் பேல் கட்டப் பட்ட துணி	25%	16·25%
30-10-49 -க்கு பின் மில்லில் பேல் கட்டப் பட்ட துணி	14%	14%

(15—11—1949 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் II பக்கம் 1082)

நூல் வியாபாரிகள் ரிடர்ன்

நூல் வியாபாரிகள் ஒவ்வொரு மாதமும், நூல் கொள்முதல் விற்று முதல், பாக்கிக் கணக்கை ஜில்லா கலெக்டர்களுக்கு அடுத்த

மார்தம் 5-ம் தேதிக்குள் நமூனுப்படி அனுப்பும் படிக்கும் உத்திரவிடப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு ஜில்லா கலெக்டராலும் தனித் தனி உத்திரவாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 15—11—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ல் சித்தூர், கோயமுத்தூர், தென் கன்னடம், தஞ்சாவூர், சென்னை இந்த ஜில்லா கலெக்டர்களுடைய உத்தரவுகள் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

நூல் வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு: மாஸ்டர் வீவர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது: பல நெசவுக்காரர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு அவர்களுக்காக நூல் வாங்கிக் கொடுத்து, அவர்களுக்கு கூலி கொடுத்தும் நெசவு முடிந்ததும் ஜவுளியாக அவர்களிடம் திருப்பி வாங்கும் பெரிய நெசவுக்காரர் (மாஸ்டர் வீவர்)களும் 'நூல் வியாபாரி'களாக கருதப்படுவார்கள். அவர்களும் இனி இக்கட்டுப்பாடு உத்தரவின்படி லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும்.

(15—11—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 191)

உணவு தானியம்

ரத்து செய்யப்பட்டது: கோதுமை, அரிசி, உளுந்து, சர்க்கரை இவைகளைக் கொண்டு செய்யப்படும் சாமான்களை (அதாவது ரொட்டி, பிஸ்கட், கேக், சேமியா, வடாம், பப்படம், அப்பளாம் மற்றும் தித்திப்பு மிட்டாய்கள் போன்ற சாமான்களை) இம்மாகாணத்தைவிட்டு வெளியே அனுப்ப வேண்டுமானாலும், கொண்டுபோக வேண்டுமானாலும் சென்னை சிவில் சப்ளை கமிஷனருடைய அனுமதிச் சீட்டு (பர்மிட்) வேண்டுமென்று 1947-ஆம் வருடத்தில் ஒரு கண்ட்ரோல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அது 8—11—49-ல் ரத்து செய்யப்பட்டது.

(8—11—1949 சென்னை சர்க்கார் கெஜட். பாகம் II பாகம் 1035)

ரேஷன்

(சென்னை டவுனைப் பொறுத்தும் மற்ற இடங்களைப் பொறுத்துமுள்ள) ரேஷனிங் ரெகுலேஷன்களில் 31 A என்று ஒரு புது விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது: ரேஷன் பர்மிட் அல்லது உத்தரவு வாங்கிக் கொள்ளாத எந்த ஸ்தாபனத்தை நடத்துபவரும் அந்த ஸ்தாபனத்தின் இடத்திலோ வேறு இடங்களிலோ சாப்பிட, ரேஷன் சாமான்களைக்கொண்டு உணவு தயார் செய்யவும், விற்கவும், கொடுக்கவும், அதற்கான ஏற்பாடுகள் செய்யவும் கூடாது.

(1-11-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 181)

மலபார் ரேஷனிங் ரெகுலேஷனிலும் மேற்கண்ட விதம் ரெகுலேஷன் 37 A என்று சேர்க்கப்பட்டிருக்கின்றது.

கரும்பு விலை நிர்ணயம்

சென்னை சர்க்கரை ஆலைக் கட்டுப்பாடு சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து மாகாண சர்க்காரால் 1949-50 வருடத்திற்கு கரும்பின் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது ஆலை வாயிலில் கொண்டுபோய்க் கொடுப்பதற்கான விலை. கரும்பைக் கொடுத்தவுடன் அதன் கிரயத்தை உடனே ஆலைக்காரர் கொடுத்துவிடவேண்டும்.

விலை விபரம்: (1) 300 டன் கரும்புக் குட்பட்டு சார் பிழியும் சக்தி உள்ள ஆலைகள் ஒரு டன் கரும்புக்கு ரூ. 42-ம், (2) 300-க்கு மேல் 1200 டன் வரை சார் பிழியும் சக்தி உள்ள ஆலைகள் ஒரு டன் கரும்புக்கு ரூ. 46—12—0-ம், (3) 1200 டன்னுக்கு மேல் சார் பிழியும் ஆலைகள் ஒரு டன் கரும்புக்கு ரூ. 47—4—0-ம் விலை கொடுக்கவேண்டியது.

(11—11—1949 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் II)

மதுவிலக்குச் சட்டம்

சென்னை மதுவிலக்குச் சட்டம் (1937-ம் வருடத்திய சென்னை ப்ரொகிபிஷன் ஆக்ட்) 16-வது செக்ஷனில் மாகாண சர்க்காருக்குள்ள அதிகாரத்தை அனுசரித்து கீழ்க்கண்ட விதிவிலக்குகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது:

ஒரு டாக்டருடைய மருந்துச் சீட்டின் படி மருந்து விற்பனை செய்யவோ அல்லது மருந்து கலந்து கொடுக்க லைசென்சு பெற்றவரிடம் ஒருவர் வாங்கும் பிராந்தி, மருந்தாக்கப்பட்ட ஒயின், ஆவசம், அரிஷ்டம் போன்ற ஆயுர்வேத ஔஷதங்கள், ஆல்கஹால் என்ற மதுசாரத்தை புளித்துப் பொங்க வைத்துச் செய்யும் மருந்துகள் இவைகளை அப்படி வாங்குபவர் வைத்திருக்கலாம்; ஓரிடமிருந்து வேறு இடத்திற்குக் கொண்டுபோகலாம்; சாப்பிடலாம். ஆனால் பிராந்தியாக இருந்தால் ஒரு சமயத்தில் இரண்டு அவுன்சுக்கும் மற்றவைகள் ஒரு தடவைக்கு ஒரு குவார்ட்டுக்கு மேல் இருக்கக் கூடாது.

(1—11—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 1948)

காகிதம்

1945-ஆம் வருடத்திய காகிதக் கட்டுப்பாடு சிக்கன உத்தரவில் 36-வது கிளாஸ் கீழ்கண்டபடி மாற்றப் பட்டிருக்கிறது: மத்திய சர்க்காரின் எழுத்து மூலமான உத்தரவன்னியில், முக்கியமாய் இந்தியாவை விட்டு வெளி நாடுகளுக்கு அனுப்பும் உத்தேசத்துடன் யாதொரு புத்தகம் அச்சடிக்கவும் பிரசுரம் செய்யவும் கூடாது.

(15—11—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 192)

ஷாப் சட்டம்

தொழிற்சாலைகளிலும், அருகாமையிலும் உள்ள கடைகள்: சாதாரணமாய் 500 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலை செய்யும் தொழிற்சாலைக் கட்டடங்களுள் இருக்கும் கடைகளுக்கும், சிற்றுண்டிச் சாலைகளுக்கும் தினசரி திறந்து மூட வேண்டிய மணிக் கணக்கு விதி இனி கிடையாது. அத்தொழிற்சாலைகளின் கேட்டுகளிலிருந்து 100 கெஜத்திற்குள் இருக்கும் கடைகளுக்கும், சிற்றுண்டிச் சாலைகளுக்கும் (அத்தொழிற்சாலை நிர்வாகத்தினாலாவது அல்லது அவைகளுடன் சம்பந்தப்பட்ட சங்கங்களாலாவது அவைகள் நடத்தப்பட்டுவந்தாலும்) அப்படியே.

(16—11—1949 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் II பக்கம் 2014)

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் பதவி வகிக்கும் காலம் நீடிக்கப்பட்டது: இப்பொழுது இருக்கும் பஞ்சாயத்து போர்டு மெம்பர்களுடைய பதவி வகிக்கும் கெடு 1—11—1949 வரை இருந்ததை மாகாண சர்க்கார் 1—2—1950 வரை நீடித்திருக்கின்றனர்.

(1—11—1949 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் I A பக்கம் 471)

மருந்து சாமான்கள் கட்டுப்பாடு சட்டம்

சென்னை மருந்து கண்ட்ரோல் 1949-ஆம் வருடத்திய ஆர்டினன்ஸ் 4-வது செக்ஷனில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை அனுசரித்து சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனரால் 3—10—1949-ல் விளம்பரப் படுத்தி இருக்கும் மருந்துகளின் விலை ஜாப்தாவை விளக்கி சில விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை.

(1) விலை நிர்ணயிக்கப்பட்ட சாமான்களைப் பிரித்து விற்றால் வீதாசாரமான விலை போடவேண்டும்.

(2) விளம்பரத்தில் கண்ட விலையைத் தவிர விற்பனைவரி சேர்க்கலாம். ஆனால், அதைத் தனியாக ரசீதில் காண்பிக்க வேண்டும்.

(3) பில் தொகை மொத்தம் கூட்டும் போது ஒரு அணாவுக்கு குறைவாக வரும் (தப்படிகளை) ஒரு அணாவாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

(4) வியாபாரிகளுக்கு விற்கப்படும் போது எப்போதும் கொடுக்கப்படும் கமிஷன் தள்ளிக் கொடுக்கவேண்டும்.

(1—11—49 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் II பக்கம் 1031

மேற்படி 1032-ம் பக்கத்தில் சில மருந்துகளின் விலையும் சிவில் சப்ளைஸ் கமிஷனரால் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது திருத்தப்பட்டிருக்கிறது.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK

187692

(பிராஞ்சுகள் : மதராஸ் & மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam. Edited and Published by R. NARASIMHAN B. A., B. L., at No. 73, Dabir West Street, Kumbakonam for Southern Book House Ltd.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மெ. மெ. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை : 20, லெக்ஷ்மிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை
கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.